ISSN (Online) : 2349 - 1639 ISSN (Print) : 2320 - 3412

# தமிழாய்வுச் சங்கமம்

# TAMILAIVU SANGAMAM

பகுதி - VIII ஜூலை - டிசம்பர் 2023 பதிப்பு - 21

வெளியீடு நாள் : 20 டிசம்பர் 2023

## சிறப்பு வெளியீடு

இந்திய கல்விசார் ஆய்வாளர்கள் அமைப்பு

(INDIAN ACADEMIC RESEARCHERS ASSOCIATION)

(AN ISO Certified Association Registered under Trust Act & NGO darpan (TN/2021/0298313) and MSME Udyam Reg. No.Udyam-TN-27-0040698)

திருச்சிராப்பள்ளி - தமிழ்நாடு - இந்தியா

www:iaraindia.com / Email:editor@iaraindia.com

மற்றும்

ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி

அண்ணாநகர், சென்னை-40

இணைந்து நடத்தும்

தமிழ் இலக்கியங்களில் சமூகநீதிக் கோட்பாடுகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

மற்றும்

தமிழாய்வுச் சங்கமம் விருது வழங்கும் விழா-2023

நாள்: 23.12.2023 சனிக்கிழமை நேரம்: காலை 10.00 மணி இடம்: ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி கலையரங்கம் அண்ணா நகர், சென்னை-40

INDIAN ACADEMIC RESEARCHERS ASSOCIATION

www.iaraindia.com editor@iaraindia.com

# தமிழாய்வுச் சங்கமம்

(பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ்)

# TAMILAIVU SANGAMAM

## கட்டுரையாளர் கவனத்திற்கு

தமிழாய்வுச் சங்கமம் பன்னாட்டு ஆய்விதழுக்கு ஆய்வுக் கட்டுரை அனுப்ப விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் இலக்கணம், இலக்கியம் சார்ந்த தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரை இருத்தல் வேண்டும்
- ஆய்வுக் கட்டுரைகள் எட்டுப் பக்கத்தில் இருந்து பத்துப் பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
- ஆய்வு கட்டுரையை பாமினி எழுத்துருவில் தட்டச்சு செய்து மின்னஞ்சல் மூலமாக எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரை அனுப்புகிறவர்கள் தங்களது பெயர், பதவி, கல்வி நிலைய முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை முதல் பக்கத்தில் தலைப்புக்குக் கீழ் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரை தெரிவு செய்யப்படும் பட்சத்தில் மின்னஞ்சல் வாயிலாக கட்டுரையாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.
- கட்டுரையாளர்கள் விருப்பத்தின் பேரில் ஏற்பு மின்னஞ்சல் அனுப்பப்படும். ஏற்பு மின்னஞ்சல் கிடைத்தவுடன் குறிப்பிட்டுள்ள பதிவுக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரையில் இடம்பெறும் கருத்துக்களுக்கும் செய்திகளுக்கும் கட்டுரையாளர்களே பொறுப்பாவார்கள். ஆய்வுக் கட்டுரையின் காப்புரிமை கட்டுரையாளர்களைச் சாரும்.
- தமிழாய்வுச் சங்கத்தில் வெளியிடப்படும் கட்டுரைகளின் உண்மைத் தன்மை மற்றும் காப்புரிமை போன்றவற்றிற்கு பதிப்பாசிரியருக்கு எவ்விதப் பொறுப்பும் கிடையாது.
- கட்டுரைகளில் இடம்பெறும் தகவல்களின் நம்பகத்தன்மை அனைத்தும் கட்டுரை ஆசிரியரையே சாரும்
- கட்டுரைகளைப் பதிப்பிக்கவும், மறுக்கவோ, சுருக்கி அமைக்கவும் பதிப்பாசிரியருக்கு அதிகாரம் உண்டு.
- பதிப்பகம் சார்ந்த எவ்விதமான பிரச்சனைகளும் நிர்வாக அலுவலக முகவரி மாவட்ட சட்ட எல்லைக்கு உட்பட்டது.

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ் - ISSN : 2320 - 3412(P), 2349 - 1639(0)

# TAMILAIVU SANGAMAM

(An International Research Journal on Tamil Literature)



## ஆசிரியர் குழு

முதன்மை ஆசிரியர்
முனைவர் **செ. பரமசிவன்**
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

## இணை ஆசிரியர்கள்

முனைவர் **அ. கோவிந்தராஜன்**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

முனைவர் **பா. பொன்னி**
ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் ராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி.

முனைவர் **பூ. மூ. அன்பு சிவா**
ஜே. பி. ஆர் பல்கலைக்கழகம், சென்னை

## கௌரவ ஆலோசகர்கள்

முனைவர் **ஆர். பரமேஸ்வரன்**
ஐரோப்பிய சர்வதேச பல்கலைக்கழகம், பாரிஸ்

முனைவர் **இலக்குவன் சொக்கலிங்கம்**
ஆங்கில மொழிப் பயிற்றுனர், கல்வித்துறை, நியூசிலாந்து

**சோம வீரப்பன்**
எழுத்தாளர், திருச்சிராப்பள்ளி

## ஆசிரியர் குழு

முனைவர் **எஸ். சுஜாதா**
ஜீ .டி. என். கலைக்கல்லூரி,
திண்டுக்கல்

முனைவர் **ஜெ. புவனேஸ்வரி**
தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி

முனைவர் **ச.அ. சையத் அகமது பிரோசு**
ஜமால் முகமது கல்லூரி
திருச்சிராப்பள்ளி

முனைவர் **ஆ. முத்துத் தமிழரசி**
அரசு மேல்நிலைப்பள்ளி,
சோமரசம்பேட்டை

முனைவர் **திரு. வேணி**
ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

முனைவர் **லதா மகேஸ்வரி**
ஸ்ரீதேவி குமாரி மகளிர் கல்லூரி,
குழித்துறை, கன்னியாகுமரி

முனைவர் **ஜே. சந்திரிகா**
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,
சென்னை

முனைவர் **த. இராமையன்**
வேல்டெக் ரங்கராஜன் டாக்டர் சகுந்தலா அறிவியல்
மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை

முனைவர் **ஆ. தர்மராஜன்**
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை

முனைவர் **கி. காவேரி**
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,
சென்னை

முனைவர் **தா. பால் தினகரன்**
ஜே எச் ஏ அஜர்சன் கல்லூரி,
சென்னை

முனைவர் **இர. பிருந்தாவதி**
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி,
சென்னை

# தமிழாய்வுச் சங்கமம்

(தமிழ் இலக்கிய கல்விசார் ஆய்வியல் அமைப்பு)

## TAMILAIVU SANGAMAM

**Tamil Literature Academic Research Association**

### உறுப்பினர் விண்ணப்ப படிவம்

1. பெயர் :

2. பிறந்த தேதி :

3. கல்வி தகுதி :

4. துறை மற்றும் சிறப்புப்பாடம் :

5. பதவி :

6. கல்வி நிறுவனம் :

7. கல்லூரி முகவரி :

:

8. வசிப்பிட முகவரி :

:

9. கைபேசி :

10. மின்னஞ்சல் :

11. கட்டணம் செலுத்திய விபரம் :

அ) தொகை :

ஆ) வங்கி :

இ) நாள் :

### உறுதிமொழி

நான் தமிழாய்வுச் சங்கமத்தில் உறுப்பினராக மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன். மேலும் தமிழாய்வுச் சங்கமத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

தேதி:

இடம்: கையொப்பம்

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டுத் தமிழ் இலக்கிய ஆய்விதழ் - ISSN : 2320 - 3412(P), 2349 - 1639(0)

பகுதி - VIII ஜூலை - டிசம்பர் 2023 பதிப்பு - 21

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி கோட்பாடுகள் – ஒரு பொதுப் பார்வை | 1 |
| 2. | ஆசீவகமும் ஊழதிகாரமும் – ஓர் ஒப்பீட்டு ஆய்வு | 7 |
| 3. | அகநாற்றில் தாய் கூற்றுகளில் உளவியல் கூறுகள் | 12 |
| 4. | சித்திரக்கவியில் அழகன் முருகன் | 17 |
| 5. | தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி கோட்பாடுகள் | 23 |
| 6. | நீதி இலக்கியங்களில் சமூக நீதி சிந்தனைகள் | 29 |
| 7. | புறநானூற்றின் வழி தமிழ்ப்புலவர்கள் சமூகநீதியாளர்களே | 35 |
| 8. | சித்திரக்கவியில் சமூக நீதி கோட்பாடுகள் | 42 |
| 9. | பெரியபுராணத்தில் சமூகநீதி | 46 |

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII*, பதிப்பு *21*, ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி கோட்பாடுகள்- ஒரு பொதுப் பார்வை

**முனைவர். செ. பரமசிவன்**
*வணிகவியல் இணை பேராசிரியர்*
*தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி*
**&**
**முனைவர். ஆ. முத்துத் தமிழரசி**
*பட்டதாரி தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சோமரசம்பேட்டை*
*திருச்சிராப்பள்ளி*

***முன்னுரை***

*சமூக நீதி என்பது இன்றைய காலகட்டங்களில் மிகவும் அதிகமாக பயன்படுத்தக்கூடிய வார்த்தையாக உள்ளது. மனிதன் தோன்றிய காலம் முதல் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் இன்று வரை தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனாலும் கூட சமூக நீதியை அனைத்து நிலைகளிலும் நிலைநாட்டி விட முடியவில்லை. காரணம் சமூக நீதி என்பது வெற்று வார்த்தையோ விளம்பர சொல்லோ அல்ல.*

சொல்வதற்கு வேண்டுமானால் மிக எளிமையாக தோன்றலாம். ஆனால் அதை செயல்படுத்துவதற்கு மிகப்பெரிய போராட்டத்தையும் எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. காரணம் சமூக நீதி என்பது மனித சமூகத்திற்கான ஒரு நெறிமுறை என்பதை தாண்டி அது ஒரு சமூகத்தின் படி நிலையாக ஒரு மதத்தின் அடிப்படை தத்துவமாக இருக்கும். சில செயல்களில் கேள்வி எழுப்பப்படுவதால் சமூக நீதியை இந்தியா போன்ற நாடுகளில் அனைத்து மக்களிடத்திலும் கொண்டு சேர்க்க முடியவில்லை. உலக நாடுகளில் எல்லாம் மனிதர்கள் சமூக வர்க்கத்தாலும், பொருளாதாரத்தாலும் பிரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் சமூக நீதிக் கோட்பாடுகளும் இந்தியாவின் சமூக நீதிக் கோட்பாடுகளும் வேறு வேறு ஆனவை. காரணம் இந்தியாவில் ஒருவர் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய செல்வந்தராக

இருந்தாலும் சாதி ரீதியாக அவர் கீழ் நிலையில் இருந்தால் அவருக்கான சமூக நீதி மிகப்பெரிய கேள்விக்குறியாகஇருக்கிறது. அதைப்போன்றே சாதி ரீதியாக உயர் நிலையில் இருந்தாலும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் அவர் சமூகத்தில் உயர்ந்தவராகவே கருதப்படுகிறார். இத்தகைய முரண் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடுகளிலும் காணப்படுவதில்லை. ஆகவேதான் இந்தியாவில் சமூக நீதி என்பது வெறும் சமூக மற்றும் பொருளாதார விடுதலைக்காக மட்டுமின்றி, அரசியல் விடுதலையை நோக்கி பயணிக்கச் செய்கிறது. அந்த வகையில் தமிழகம் சமூக நீதியை வலியுறுத்துவதிலும், நிலை நாட்டுவதிலும், அரசியல் படுத்துவதிலும் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அதற்கான காரணம் அயோத்திதாசர் பண்டிதர் தொடங்கி, பெரியார் தீவிரமாகச் செயல்பட்டு கலைஞரால் சட்டமாக்கப்பட்ட சமூக நீதி கொள்கைகளும் இட ஒதுக்கீடுமே ஆகும்.அந்த வகையில் தமிழகத்தில் இப்போது இருக்கும் சமூக நீதி ஏற்றத்தாழ்வுகளே நம்மை அச்சமடைய செய்கின்றபோது மற்ற மாநிலங்களில் எத்தகைய நிகழ்வுகளை மனித சமூகத்தில் ஏற்படுத்தும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமூக நீதி என்பது எல்லா மனிதருக்கும் சமம் என்பதும், மனிதர்களில் யாரும் உயர்வு தாழ்வு பார்க்க கூடாது என்பதும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதும் ஆகும். ஆனால் எதார்த்த நிலையிலோ இன்றளவும் சமூக நீதி எல்லா மக்களுக்கும் கிடைத்துவிட்டதாக கருதி விட முடியாது. காரணம் சாதியால் ஒருவரை கீழ் என்றும் மற்றொருவரை மேல் என்றும் கருதும் மனப்பான்மை இன்றளவும் நம் நாட்டில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதைவிட பெரிய கொடுமை சமூக நீதியை பற்றி பேசும் அறிஞர்கள் அரசியல் தலைவர்கள் சமூக ஆர்வலர்கள் கூட தங்களை மேல்மட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் கீழ்மட்ட மக்களை காக்க வந்திருக்கும் பிதாவாகவும் கருதி கொள்வதே ஆகும். அப்படித்தான் இன்றும் இது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றால் சமூகநீதி குறித்த பரந்த பார்வையும் மனித நேயம் குறித்த சிந்தனையும் இருக்கும் போது மட்டுமே சமூக நீதி என்பது அனைவருக்கும் சாத்தியமாகும். அந்த வகையில் சமூக நீதிக் கோட்பாடுகளை எல்லா நிலையிலும் எல்லா வழியிலும் தெரிந்து கொள்ள முயற்சி செய்யும் அனைவருக்கும் இக்கட்டுரை பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

தமிழ் இலக்கியங்கள் அறம் மற்றும் புறம் சார்ந்த கோட்பாடுகளையும் வாழ்வியல் செய்திகளையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. அந்த வகையில் அறம் சார்ந்த தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி

மேலோங்கி நிற்கிறது. அனைத்து மனிதர்களும் சமம் என்பதையும், அனைவருமே சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதையும் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே கோடிட்டுக் காட்ட மறக்கவில்லை. ஆனால் இந்த மனித சமூகமும் அதைப்பற்றி பெரிதாக கவலை கொள்ளாமல் சங்க இலக்கியத்தின் தொன்மையையும், தன்மையையும் வாழ்வியலையும் பாராட்டிக் கொண்டிருக்கிறது. பத்துப்பாட்டாக இருந்தாலும், எட்டுத்தொகையாக இருந்தாலும், திருக்குறளாக இருந்தாலும், அகநானூறாக இருந்தாலும், புறநானூறாக இருந்தாலும் அனைத்து இலக்கியங்களிலும் சமூக நீதி கோட்பாடுகள் ஆங்காங்கே விதைக்கப்பட்டு இருக்கிறது. அதை நாம் தான் அடையாளம் கண்டு பொது சமூகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். அதுவே சமூகத்திற்கு செய்யும் மாபெரும் தொண்டாக அமையும்.

சங்க இலக்கியங்கள் ஒருபோதும் ஆண்டான் அடிமை முறையை ஆதரிக்கவில்லை. சங்க இலக்கியங்கள் ஒருபோதும் பெண் அடிமைத்தனங்களை அங்கீகரிக்கவில்லை. சங்க இலக்கியங்கள் ஒருபோதும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தவில்லை. சங்க இலக்கியங்கள் ஒருபோதும் மனிதநேயத்தை மறைத்துக் காண்பிக்கவில்லை. சங்க இலக்கியங்கள் ஒருபோதும் சமத்துவத்தை போதிக்க தவறியதில்லை. அப்படி இருக்க இடையில் வந்த சாதிய பிரிவுகள் தமிழ் சமூகத்தை பிளவு படுத்தி சமூக நீதியை குழி தோண்டி புதைக்கும் காரியத்தை செய்து வருவது மிகவும் வருந்தத்தக்கது. கற்றறிந்தவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் கூட சாதிய கட்டமைப்பை விட்டு வெளியே வர முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதும், சிலர் அதையே பெருமையாக பேசிக் கொண்டிருப்பதும் நாகரீக மனித சமூகத்திற்கு ஒத்து வராத செயலாகும். அது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இல்லை என்றால் இளைய சமூகத்திற்கும் அத்தகைய மனநிலை உருவாகி அதன் மூலம் சமூக நீதிக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படக்கூடும். ஆகவே சமூக நீதிக்கு எதிராக எத்தகைய கருத்துக்களும் செயல்பாடுகளும் ஏற்றுக் கொள்ள கூடியதாக இருக்க முடியாது.

பக்தி இலக்கியங்கள் கூட சமூக நீதியை பறைசாற்றும் ஆவணங்களாகவே இருந்திருக்கிறது. ஆனால் இன்றோ ஆன்மீகத்தின் பெயரால் சமூக நீதியை சிலர் சிதைக்க நினைப்பது மிகப்பெரிய சதி என்பதை நாம் புரிய புரிந்து கொள்ள வேண்டும். காரணம் ஆன்மீகம் ஒருபோதும் மனிதர்களை பிரித்துப் பார்ப்பதில்லை, கடவுள் ஒருபோதும் மனிதர்களிடத்திலே ஏற்றத்தாழ்வை காண்பதில்லை,

பக்தி ஒருபோதும் மற்றவர்களை மட்டமாக நினைப்பதில்லை, மதம் ஒருபோதும் மனிதனை அடிமையாக வைத்திருக்க விரும்புவதில்லை. அப்படி இருக்கையில் எதற்காக மனிதர்களிடத்தில் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளும் சாதியின் அடிப்படைகளில் பிரிவினைகளும் என்ற கேள்வி நம்மில் எழும் போது தான் சமூக நீதியின் தேவையும், அவசியமும் புரிகின்றது. தினமும் அறுசுவை உணவு உண்பவனுக்கு அன்னதானம் வழங்கும் போது அவனால் அதை அனுபவிக்க முடிவதில்லை. ஆனால் உணவுக்கே வழி இல்லாமல் திண்டாடும் ஒருவனுக்கு உணவு கொடுக்கும் பொழுது அவன் அதை அனுபவித்து மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்கிறான். இப்படித்தான் காலம் காலமாக சமூகத்தின் அடித்தட்டில் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கும் சராசரி மனிதனை சமமாக கட்டித் தழுவும் பொழுது அவன் அடையும் ஆனந்தம் அவனுடைய வாழ்வை அர்த்தமாக்கி விடுகிறது. சமூக நீதி என்பது ஒருவர் மற்றவர்களுக்கு கொடுப்பதல்ல, ஒவ்வொருவருக்கும் இருக்கும் இயற்கை நீதி. அதை மற்றவர்கள் தடுக்க முடியாது, தடுக்கவும் கூடாது. அப்படி தடுக்கும் சக்திகளை தகர்த்தெறியப்பட வேண்டும் என்ற சிந்தனை உள்ளவர்களே உண்மையான சமூக நீதியாளர்கள்.

சமூக நீதிக் கோட்பாட்டின் எல்லைகளும் வரையறைகளும் நீண்டு காணப்படுவதற்கு மிக முக்கிய காரணம் சமூக நீதி. சமூக நீதி என்பது சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்காக மட்டுமல்லாமல் மானிட சமூகத்தில் மனிதநேயத்தை பாதுகாத்திடவும் அனைவரும் சமம் என்ற தத்துவத்தை நிலை நிறுத்தவும் சமூகநீதி கோட்பாடுகள் தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு கலை இலக்கிய வடிவங்களில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இன்றளவும் கூட சமூக நீதி கோட்பாடுகள் பல்வேறு பரிணாம வளர்ச்சி பெற்று மனித சமூகத்தின் மாபெரும் நாகரிகத்தை வெளிப்படுத்தும் சித்தாந்தமாகத் தொடர்கிறது அந்த வகையில் இலக்கியங்களில் காணப்படும் சமூக நீதிக் கோட்பாடுகள் வெளிக்கொணரப்பட வேண்டும் அதன் தன்மைகளையும் அதன் முக்கியத்துவத்தையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் அதற்கான வாய்ப்பாக இது போன்ற கருத்தரங்குகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு இந்திய கல்வி சார்ந்த ஆய்வாளர்கள் அமைப்பின் தமிழாய்வுச் சங்கமம் எடுத்திருக்கும் முயற்சியும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் கல்வியாளர்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த மானுட சமூகத்திற்கும் ஒரு ஆவணமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை அதை நோக்கிய பயணத்தில் தனிமனிதனும் அமைப்பும் சமூகமும் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்க வேண்டும் அப்போதுதான் சமூக நீதியின் நோக்கமும் தாக்கமும் எதிர்காலச் சமூகம் புரிந்து கொள்ள முடியும் . இன்றையகாலகட்டங்களில் கூட

இளைய தலைமுறைகளுக்கு சமூக நீதியின் உண்மையான விளக்கம் தெரிவதில்லை. காரணம் அவர்கள் சமூக அநீதிகளை காணாமல் அல்லது அவற்றை அனுபவிக்காமல் வளர்ந்து இருப்பார்கள் அல்லது வளர்க்கப்பட்டிருப்பார்கள்.

ஆகவே, அவர்களுக்குச் சமூக நீதியின் தாக்கம் தெரிவதில்லை. ஆனால், இன்றளவும் சமூகத்தில் கடை கோடி நிலையில் இருக்கும் சில மக்கள் சில மனிதர்கள் சமூக அநீதிகளை சகித்துக் கொண்டும் அதற்கு எதிராகப் போராடிக் கொண்டும் சமூக நீதியை நோக்கிய பயணத்தில் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டும் வாழ்ந்து வருகிறார்கள் அவர்களின் நோக்கம் அவர்கள் காலத்திலே அவர்களுக்கு சமூக நீதி கிடைக்கும் என்பதைத் தாண்டி அவர்களின் போராட்டத்தின் மூலம் எதிர்காலச் சமூகத்திற்கு சமூக நீதியை எடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையின் காரணமாகவே அவர்கள் அப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இன்னும் பல நூறு ஆண்டுகள் ஆனாலும் சமூக நீதி குறித்த உரையாடல்களும் செயல்பாடுகளும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும். காரணம் மனித சமூகம் இருக்கும் வரை சில மனிதர்களால் சமூக அநீதிகள் இழைக்கப்பட்டு கொண்டே இருக்கிறது. அதை பாதிக்கப்பட்டவர்களால் தட்டிக் கேட்க முடியாத சூழலில் அது குறித்த புரிதல் உள்ளவர்கள் சமூக அநீதிக்கு எதிராகச் சமூக நீதியை நிலைநாட்ட தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறார்கள். இதுதான் எதார்த்தமான நிலை இந்நிலையை மாற்றுவதற்கான எல்லா முயற்சியும் பல்வேறு காலகட்டங்களில் எடுக்கப்பட்டிருந்தாலும் இன்றும் எங்கோ ஒரு மூலையில் சமூக அநீதி நடந்து கொண்டே இருக்கிறது. அல்லது யாரோ ஒருவருக்குச் சமூக நீதி தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அப்படி யாரோ ஒரு தனிமனிதனுக்கு இச்சமூகத்தால் ஏற்படும் அநீதி அவனுடைய மனித மாண்பை அவமானப்படுத்துவதாகவோ அவனது உரிமையை மறுக்கப்படுவதாகவோ இருந்தால் அதை சரி செய்ய வேண்டியது மனிதர்களாக பிறந்த நாம் ஒவ்வொருவரின் கடமையாகவே கருதப்பட வேண்டும் ஏனெனில் அரசாங்கம் பல்வேறு சட்டங்களை இயற்றியிருந்தாலும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி இருந்தாலும் பல்வேறு சலுகைகளை வழங்கியிருந்தாலும் அதையும் தாண்டி ஆங்காங்கே சில சமூக அநீதிகளும் மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அத்தகைய போக்கினைத் தடுத்து நிறுத்துவதற்கு எங்கெல்லாம் சமூகநீதி குறித்த பார்வையை விசால விசாலமாக்க முடியுமோ அங்கெல்லாம் அதை பரவச் செய்வதன் மூலம் சமூக நீதி குறித்த பார்வை அனைவருக்கும் சென்று சேரும். அதன் மூலம் முற்றிலுமாக சமூக அநீதி ஒழிக்கப்படாவிட்டாலும் சற்றேனும் குறைக்கப்பட முடியும் என்ற நம்பிக்கையே சமூக நீதியை எடுத்து செல்பவர்களின் நோக்கமாக இருக்கிறது .அந்த வகையில் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்ற சமூக நீதியும் அதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களையும் கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் தெரிந்துக் கொண்டும் புரிந்து கொண்டும் அதற்கான எதிர்வினையை ஆற்றுவதற்கான களமாக தளமாக இக்கருத்தரங்கு அமையப்பெறும்

என்று இந்திய கல்வி சார்ந்த ஆய்வாளர் அமைப்பு நம்புகிறது . அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்த கருத்தரங்கத்தை நடத்துகிறது. இங்கே விதைக்கப்படும் கருத்துக்கள் யாருக்காவது ஒருவருக்கு மாற்றத்தை ஏற்படுத்தலாம் அல்லது என்றாவது ஒருநாள் மாற்றத்திற்கான தேவையாக இக்கருத்தரங்க கருது பொருள் அமையலாம் அப்படி அமையும் பட்சத்தில் அதுவே இக்கருத்தரங்கின் வெற்றியாகப் பார்க்கப்படும். அதுவே கருத்தரங்கில் வளர்ச்சியாகப் பேசப்படும் . அதுவே இக்கருத்தரங்கின் வரலாறாக மாற்றப்படும்.சமூக நீதியை எல்லா இடங்களிலும் பாதுகாப்பதற்கான பயிற்சியையும் முயற்சியையும் மேற்கொள்வோம்; அதன் மூலம் மனித சமூகத்தை மனிதநேயம் மிக்க சமூகமாக மாற்றுவோம்.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# ஆசீவகமும் ஊழதிகாரமும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**முனைவர். ஏ. சாந்தகுமார்**
பட்டதாரி ஆசிரியர், தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளி, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்

***முன்னுரை***

சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய மூன்று சமயங்களும் வைதீகத்தின் வேத மறுப்பு, யாக மறுப்பு, உயிர்ப்பலி மறுப்பு போன்ற கொள்கைகளில் ஒன்றுபட்டு காணப்பட்டாலும் ஆசீவகத்தின் ஊழ் - விதி, தலைவிதி (நியதி) கொள்கைக்கும் வினை, கர்மாவிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆசீவகமும் இந்தியா முழுமையும் பரவியிருந்தது. ஆஜிவ – ஆஜிவக (வடமொழி), ஆசீவகம் என தமிழ் நாட்டிலும் பரவலான சமயமாக இருந்தது. ஆசீவகம் என்பது ஒரு வாழ்க்கை நெறிமுறை தத்துவமாகும். ஆசீவக மதத்தின் மெய்யியல் கோட்பாடுகளின் மையக்கல் ஊழ் - விதியாகும். ஊழின் வலிமை, முரண்படு மெய்மைகள், திருக்குறளில் ஊழ் அதிகாரம் - 38 குறித்த ஒப்பீட்டு ஆய்வை இக்கட்டுரை மானுடவியல் நோக்கில் பகிர்கிறது.

**வரலாற்றுப் பின்புலம்**

இந்திய வரலாற்றில், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய சமயங்களில் சமணம், பௌத்தம், ஆசீவகமாகும். இக்காலம் தத்துவ எழுச்சிக் காலமாகும். ஆசீவக சமயத்தின் சிந்தனையாளர் மக்கலி கோசகரும், சமண சமயத்தின் 24 வது தீர்த்தங்கரர் வர்த்தமான மகாவீரரும் சமகாலத்தவர்கள் ஆவர். ஆறாண்டு காலமாக நெருங்கிப் பழகிய பின்னர் கருத்துவேறுபாடு காரணமாகப் பிரிந்து சென்றனர்.

இந்திய மக்களின் பழக்கத்தில் இருந்த இயற்கை விதியை வலுவான கருத்தியலாக ஊழ் விதியாக ஆசீவகம் மாற்றியது. வட இந்தியாவில் ‘நியதி’ என்றும், தமிழகத்தில் ஊழ், விதி, தலையெழுத்து என்றும் பெயரிட்டனர். ஊழ் விதி என்பது மக்களின் வாழ்க்கையை இயக்கும் ஓர் இயற்கை ஆற்றல் ஆகும். ஆ்ஃது ஓர் வாழ்க்கை நெறிமுறையாகும். சமண, பௌத்த சமயங்களில் ‘வினை’ என்று சுட்டும் போது, வைதீக வேத சமயம் ‘கர்மா’ என்றது. ஆசீவகர்களின் விதியும், சமணர்கள், பௌத்தர்கள், இந்துக்கள் கூறும் வினையும் ஒன்றல்ல. ‘ஊழ்’ எனும் ‘விதி’

ஆசீவகர்கள் மதக் கருத்தின் அச்சாணியாகும். ஆசீவகம், சமணம், பௌத்தம் மூன்றுமே வைதீக வேத மதத்தின் பிராமணியங்களை எதிர்த்தனர். வேத மறுப்பு, யாக மறுப்பு, உயிர்ப்பலி மறுப்பு ஆகியவை இம்மூன்று சமயங்களின் அடிப்படை கோட்பாடாக இருந்தது. குறிப்பாக, வைதீக மதத்தின் யாகங்களில் உயிர்ப் பலி கொடுக்கும் செயலை எதிர்த்து நின்றனர். மறுப்பாக, கொல்லாமையைப் பின்பற்றினர்.

**ஊழ் வலிமை**

ஊழ், விதி, தலைவிதி, தலையெழுத்து என்பது, உயிர் கருவில் பட்டபோதே நியமிக்கப்பட்டுவிடும். மனித முயற்சிக்கு மீறி நடக்கும் செயலே ஊழ் விதியாகும். மனிதனின் இரத்த குணங்களாக, பரம்பரை நோய்களாக தோன்றுகின்றன. (DNA, RNA) 'முதிர்ந்த வினை' என்பது கருவில் இருக்கும் போதே முன் கூட்டியே தீர்மானிக்கப்படுவதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனியாள் வேற்றுமைப் பண்பில் கண்ணின் கருவிழியும், கைரேகையும் வேறுபடுகின்றன. இது மனிதன் தோன்றிய காலம் முதல் கடைசிகாலம் வரை வேறுபட்ட தனியாள் அடையாளமாகும். இயற்கையின் விதிப்படி, வளி மண்டலத்தின் காற்று அழுத்தமும் மனித உடலின் காற்று அழுத்தமும் ஒரே அளவாக இருக்கும். அதே போல, கடலில் காணப்படும் உப்பின் அளவும் மனித உடலின் உப்பின் அளவும் ஒரே அளவாக இருப்பது கவனிக்கத்தக்கது. ஆகவேதான் 'என் தலையில என்ன எழுதி இருக்கோ அதுதான் நடக்கும்' என்பது பாமர மக்களின் வழக்கில் வரும் சொல்லடையாகும். அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் காணப்படுகிறது. இதுவே உலகுக்கும் உடலுக்கும் உள்ள உறவாகும். உலகாயுதம், தேகவாதம், பூதவாதம், சாருவாகம் என்று ஒரே பொருளில் பல சொற்கள் காணப்படுகின்றது. உடல் – மன – உயிர் இயக்கத்தில் நிறங்கள், கோள்களின் மின் – காந்தக் கதிர்கள், உணவு(சுவை), உடலிலுள்ள சக்தி மையங்கள், உடலிலுள்ள சுரப்பிகள், உடல் உறுப்புகள், நோய்க் குறிகள் அனைத்தும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்புடையதே.

உடுக்கள் (நட்சத்திரங்கள்), சூரியன், பூமி, துணைக் கோள், ஐம்பூதங்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும்(செல்) அணுக்களின் தொகுப்பால் ஆனது. அணுக்களை நிறங்கள்தான் ஆதிக்கம் செலுத்துகின்றன. அணுக்களின் உணவு வண்ண நிறங்கள் ஒவ்வொன்றும் தன்னுள் மின் - காந்த சக்தியினைக் கொண்டதாக இருக்கிறது. ஒவ்வொரு அணுவும் ஒரு குறிப்பிட்ட அதிர்வலையைக் கொண்டது. நிறங்கள் நமது நரம்பு மண்டலங்கள் மூலமாக நம் ஒவ்வொரு உறுப்பையும் இயக்குகிறது காஸ்மிக் கதிர்). இப்பிரபஞ்சத்தில், உடுக்கள் என்பது சூரியனாகும். இவற்றில் காந்த தூசிகளும், மந்த வாயுக்களும் காணப்படுகின்றன (H + He). பிரபஞ்சம் என்பது விண்வெளியிலுள்ள நட்சத்திரங்கள், சூரியன், பூமி, சந்திரன், எரிகற்கள் போன்று கண்ணுக்குத் தெரிந்தும், தெரியாமலும் இருக்கும் கோடானகோடி நட்சத்திரக் கூட்டங்கள் அடங்கிய தொகுப்பே ஆகும். இயற்கையில் எந்த ஒரு பொருளும் சக்தித் துகள்களால் ஆனது. சக்திக் களம் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட

அதிர்வு நிலை உண்டு. இந்த அதிர்வுத் தன்மை உயர் எண்ணிக்கையில் இருக்கும்போது நம் கண்களுக்குப் புலப்படாமலும், மிகக் குறைந்த அளவில் அதிர்வடையும் போது நம் கண்களுக்குப் புலப்படவும் செய்யும். நமது மனம் இதற்கு மேற்பட்ட நுண்ணிய பொருளாகும். இந்த மையங்கள் முதலில் நம் உடலிலுள்ள சுரப்பிகளை பாதிப்பதால் மனம் தொடர்பான அல்லது நரம்பு தொடர்பான நோய்கள்தான் எளிதில் தோன்றும், நீண்ட நாட்களுக்குப் பிறகுதான் உடலில் நோயின் அறிகுறிகள் தெரியும்.

ஐம்பெரும் சக்திகளின் தொகுப்புதான் நமது உடல். இயற்கையின் சுழற்சியில் முதலில் தோன்றியது வெளியாகும். வெளியிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்த நீரும், நீரிலிருந்து நிலம் தோன்றியது. பிரபஞ்சப் பேரியகத்தின் மூல காரணமான பேரொளியை தன்னுள் உணர்ந்து விழிப்புணர்வு அடைந்தவர்கள் அனைத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையோரே சித்தர்கள் என்று அழைக்கலாயினர். மனதின் துணைகொண்டு சித்தத்தை வசியப்படுத்திய சித்தர்கள் நமக்கு நாம் வாழும் பூமியும் அதைச் சார்ந்த உயிரினங்களும் ஆரோக்கியமாக வாழ்வதற்காகத் தரப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவமாகும். நமது மனித உடலை சித்த மருத்துவத்தில் சித்தர்கள் மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். அவை முறையே தூல தேகம், சூக்கும தேகம், காரண தேகம் என்பனவாகும். தூல தேகமான உடலை மட்டுமே நம் கண்களுக்கு தெரியும் நிலை உள்ளது. சூக்கும தேகமும், காரண தேகமும் ஓக சாதனை வழியாக பகுத்துணர முடியும். நம் உடலிலுள்ள நீர், வெப்பம், காற்றோட்டம் சமநிலையை (1/4, 1/2, 3/4) கவனித்துக் கொள்கிறது.

ஆக உயிர்களும், அணுக்களும் நிரந்தரமானவை. உயிர்களுக்கு ஏற்படும் மாற்றங்களும் அவை தோன்றும் போதே நியமிக்கப்பட்டுவிட்டன என்ற நம்பிக்கையுடையவர்கள் ஆசீவகர்கள். பொருட்கள் மாறுபடா நிலைபேறுடையவை என்று கூறுகின்றனர். தற்செயலும் ஊழும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாது. தற்செயல்தான் ஊழாய் மாறும் என்பது ஆசிவக மெய்யியலாகும்.

**ஊழ்: அதிகாரம் 38**

குறள் 371: ‘ஆகூழ் X போகூழ்(இழவூழ்)’ என்ற முரண்படு மெய்மையில், ஆகூழானது பொருளோ அல்லது நிகழ்வோ ஆக்கப்பூர்வமாக சோம்பலில்லாத முயற்சியால் தானே வந்து சேரும். போகூழானது சோம்பல் தன்மை உண்டாக்குவதால் செல்வம் அவனை விட்டுப் போகும். அழிவுப்பூர்வமாகச் செல்லும்.

குறள் 372: இழவூழ் ஒருவனிடம் செயல்பட்டால் அவனை அறிவற்றவனாக்கும், ஆக்கம் தரும் ஆகூழின் செயல்பட்டால் அவன் அறிவை விரிவடையச் செய்யும்.

குறள் 373: ஒருவன் நுண்நூல் பல கற்றாலும் ஊழின் வலிமையால் அவனுக்கு இயல்பான உண்மையறிவே மேம்பட்டு நிற்கும்..

குறள் 374: உலகத்தினியல்பு இருவகையானது. செல்வம் உடையவர்கள், அறிவுடையவர்கள் என இரண்டிற்கும் ஊழ் தனித்தனியானவை.

குறள் 375: செல்வத்தை தேடுகையில் ஊழின் ஆற்றலால் நல்லவைகளெல்லாம் தீயவைகளாகவும் தீமைகள் நல்லவையாகவும் படும்.

குறள் 376: விதியினால்(ஊழ்) ஒருவன் எவ்வளவு பொருள்களை காத்தாலும் அவனைச் சேராது. ஒருவன் தமக்கு விதியுள்ள பொருள்களை வெளியில் கொண்டு போய் வீசினாலும் அவனை விட்டுப் போகாது.

குறள் 377: கோடிக்கணக்கான பொருளைச் சேர்த்தவரும் ஊழ்வினை வகுத்தபடிதான் இன்பம் நுகர முடியும்.

குறன் 378: ஆஊழினால் வரும் துன்பங்களால் உணவு, உடை கிடைக்கப் பெறாத ஏழையானவன் துறவினை மேற்கொள்வான்

குறள் 379: நன்னிகழ்ச்சிகள் நடைபெறும் போது அவற்றை நல்லவனாகப் பார்ப்பவர்கள், அவை நிகழாத பொழுது துன்பப்படுவது ஏன்? எதற்காக?

குறள் 380: ஊழைவிட வலிமையானது எதுவுமில்லை. அதிலிருந்து தப்பிக்க வேறுவழியை தேடிச் சென்றாலும் முன்வந்து நிற்கும்.

ஊழின் காலத்தில், ‘சும்மா இருக்க சுகம்’ என்ற அடிப்படையில் அமைதி காக்க வேண்டும். ஆசிவகர்கள் பெறுதல் X இழத்தல், துக்கம் X சுகம், பிறத்தல் X சாதல் இவையெல்லாம் ஒரு உயிர் கருவிற்பட்டபோதே அவ்வுயிரில் கலந்து விடுகின்றது என்று நம்புகின்றனர். ‘பணம் பணத்தோடு சேரும்’, ‘ஒட்டுறதுதான் ஒட்டும்’, எது ஒருவனுக்குச் சேராதோ அது அவனுக்குச் சேராது. எது சேர வேண்டுமோ, அது முயற்சியின்றி அவனை வந்த சேரும்.

**முரண்பாடு மெய்மைகள்**

நேர்மறை சிந்தனை, சொல், செயலால் நன்மை நிகழ்வது போல, எதிர்மறை சிந்தனை, சொல், செயலால் சிலவேளை நன்மை நிகழ்வதும் உண்டு. ஆக, ஊழ் வலிமையானதும், முதன்மையானதுமாகும்.

‘காரணமின்றி காரியமில்லை’ என்ற கருத்திற்கு, செயல் - வினைவு இரண்டும் கருவில் படும்போதே முன்கூட்டியே தீர்மான விதியின் படியே (DNA & RNA) நடக்கும் என்று ஆசீவகர்கள் நம்புகின்றனர். விதியை மீறி எதுவுமில்லை என்ற கருத்திற்கு ‘விதியை மதியால் வெல்லலாம்’ என்ற எதிர் கருத்தும் ‘முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்ற கருத்தும் தோன்றியது. ‘ஏழரை மாத விதியில் நடப்பதுதான் நடக்கும் என்பதற்கு மாற்றாக ‘பரிகாரம்’ சொல்வதும் - செய்வதும் பாமர மக்களுக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இது ‘பிழைப்புவாதத்திற்கு’ வழிவகுக்கிறது. ‘ஏமாற்றும் வழியை’ உருவாக்குகிறது.

ஊழ்(தமிழக ஆசிவகர்கள்), விதி, தலைவிதி, நியதி(வடமொழி), வினை (சமண – பௌத்தம்), கர்மா (வைதீகம்) ஒவ்வொன்றிற்கும் தனித்த வேறுபாடுகள் உண்டு. ஆகூழ் (ஆகலூழ்) X போகூழ் (இழவூழ்) என்று ஊழ் இருவகைப் படும். நன்மை X தீமையை ஏற்படுத்தும் ஊழாக செயல் - வினையை முன்கூட்டியே தீர்மானிக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை விதியின் படியே நடத்துகிறது. முயற்சி X சோம்பல், செல்வராதல், அறிவு X பேதை, நல்லவை X கெட்டவை, இன்பம் X துன்பம் என்ற தலைவிதிப்படியே எவ்வித முயற்சியும் அல்லாமல் நடந்தேறும்.

துன்பம் X இன்பம் = அமைதி, பிறப்பு X இறப்பு =

வாழ்வு, வன்மை X மென்மை = அதிர்வு, ஆண் X பெண் = அலி(பால்), வெப்பம் X குளிர் = சமம் (சீர்). ஒவ்வொரு கணப்பொழுதும் மாறிக்கொண்டே இருந்தாலும் அவையும் ஊழ் விதிக்கு உட்பட்டே தற்செயல் நிகழ்வாக நடக்கும் என்பது ஆசீவகத்தின் நம்பிக்கையாகும். தற்செயலும் ஊழும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதது. தற்செயல்தான் ஊழாய் மாறும் என்பது ஆசீவகத்தின் மெய்யியலாகும்.

**முடிவுரை**

'ஊழ்' என்பதும் விதி, தலைவிதி என்பதும் பொருள் ஒன்றே. ஆகூழ் X போகூழ் (இழவூழ்) என்று இரண்டு வகைப்படும். ஆகூழ் என்பது ஆக்கப்பூர்வமானது. போகூழ் என்பது அழிவுப்பூர்வமானது. உயிரோடு இருக்கும் வரையில் மனிதன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற இன்பியல் தத்துவம் உடையது. உயிர்களும், அணுக்களும் நிலைபேறானவை. மாற்றம் இல்லாதவை. விதி என்பது காரண – காரியங்களில் உட்பட்டது அல்ல. செயல் - விளைவை முன்கூட்டிய தீமானத்தின் அடிப்படையில் உயிர் கருவில் சேரும் பொழுதே தீர்மானித்து விடுகிறது என்பது ஆசிவகத்தின் முடிவு ஆகும். தவயோகிகளும், சித்தர்களும் விதியின் வலிமையை உணர்ந்து 'சும்மா இருக்க சுகம்' கண்டார்கள். வேதத்தையும், பிராமணத்தையும், வைதீகத்தையும் எதிர்த்தவர்கள். வேத மறுப்பு, உயிர்ப்பலி மறுப்பு, யாக மறுப்பு செய்தவர்கள். தலைவிதி என்பது மனித முயற்சிக்கு மீறி நடக்கும் செயலாகும். ஊழ் உயிர் கருவில் பட்டபோதே நியமிக்கப்பட்டு விடும் (பரம்பரை நோய்). ஆக, ஆசீவகம் என்பது மனிதநேய சிந்தனைகளை உள்ளடக்கிய வாழ்வியலும், தத்துவமும், அறிவியலுமாகும்.

**துணை நூல்கள்**


1. **திருக்குறள்**
2. விஜயலட்சுமி.ர, **தமிழகத்தில் ஆசிவகர்கள்,** கிழக்கு பதிப்பகம் : சென்னை – ஜுன், 1988.
3. நெடுஞ்செழியன்.க, **ஆசிவகமும் ஐயனார் வரலாறும்**, ஜாஸிம் பப்ளிகேஷன்ஸ் : திருச்சிராப்பள்ளி – 2023.
4. ஸ்டீபன் மிக்கேல் ராஜ்.ம(தொ), **ஐந்தருவி**, வீரமா முனிவர் கலை இலக்கிய மன்றம் : தேவகோட்டை – ஆகஸ்ட், 2023.
5. ரமணி ஆ.ர், **எண்களைக் கொண்டு உங்களைப் புரிந்து கொள்ளுங்கள்**, ஶ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் : சென்னை – ஜுலை, 2001.
6. Santhakumar.Y, **Historical and Dialectical Analysis of Pathinen Siddar Literature** (P.hd. Thesis). P.G & Research Department of History. H.H. the Raja's Govt. Arts College (Autonomous): Pudukottai, May – 2019.
7. சண்முகம்.மா, **சித்தமருத்துவப் பயிற்சிக் கையேடு**, சித்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான உலகளாவிய மையம் : சென்னை – ஆகஸ்ட், 2023.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# அகநாற்றில் தாய் கூற்றுகளில் உளவியல் கூறுகள்

## முனைவர் அ. இராஜலட்சுமி
**உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்**

***முன்னுரை***

தமிழர் வாழ்வை அகம் புறம் என இரு வகைப்படுத்தி உள்ளனர். தலைவன், தலைவி இடையில் நிகழும் காதல் மற்றும் திருமண வாழ்வைக் கூறுவது அகத்திணை. ஒருவரது வீரம், கொடை,வெற்றிச் சிறப்பு பற்றிக் கூறுவது புறத்திணை. அகத்திணையில் தலைவரும் தலைவியும் முதன்மை மாந்தர்களாக உள்ளனர். தோழி,செவிலி, நற்றாய், பாணன், பரத்தை, கண்டார் முதலியோர் துணை மாந்தர்களாக உள்ளனர். முதன்மை மாந்தர்களுள் தலைவிக்கும் துணை மாந்தர்களுள் தோழிக்கும் கூற்று நிகழும் இடங்கள் அதிகம். அகநானூற்றில் நானூறு பாடல்களுள் இருபத்தைந்து பாடல்கள் மகட் போக்கிய தாய் சொல்லியதாக உள்ளன. அகநானூற்றில் முதல் இருநூறு பாடல்களில் செவிலி மற்றும் நற்றாய் கூற்றுகளாக அமைந்த பதினான்கு பாடல்கள் உளவியல் கூறுகள் வழியாக ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

செவிலிக் கூற்று

அகநானூற்றின் முதல் இருநூறு பாடல்களில் செவிலிக்கூற்றுகளாக ஒன்பது பாடல்கள் உள்ளன. இவற்றுள் ஆறு பாடல்கள் தலைமகளின் உடன் போக்கினை எண்ணி ஆற்றாமல் தனது நெஞ்சிற்குக் கூறுவதாகவும், சுரவழி நவ்விப் பிணாக் கண்டு கூறியதாக ஒரு பாடலும் அயலாரிடம் கூறி வருந்தியதாக ஒரு பாடலும் தன்மகளிடம் (தலைவியின் தோழியிடம்) கூறுவதாக ஒரு பாடலும் அமைந்துள்ளன.

**நற்றாய் கூற்று**

அகநானூற்றில் முதல் இருநூறு பாடல்களில் நற்றாய் கூற்றுகளாக அமைந்த ஐந்து பாடல்களுள் தெய்வத்திடம் கூறுவதாக இரண்டு பாடல்களும் அயலாரிடம் கூறுவதாக ஒரு பாடலும் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக இரண்டு பாடல்களும் அமைந்துள்ளன.

**தாயின் மனவெழுச்சி**

தலைவி உடன் போக்கினை எண்ணி தாயிற்கு ஏற்பட்ட துயரம், அச்சம் ஆகியவை மனவெழுச்சி கூறுகள் அடிப்படையில் உற்று நோக்கப்படுகிறது.

**மனவெழுச்சி**

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். நம்மை வெகுவாகப் பாதிக்கும் நிகழ்ச்சியிலோ, நாம் மிக்க ஆர்வம் கொண்டுள்ள சூழ்நிலையிலோ, மனவெழுச்சிகள் நம்மிடம் இயல்பாகத் தோன்றுகின்றன. இவை அவசர நிலைகளில் தோன்றி, நமது உடலையும் ,மனத்தினையும் கிளர்ச்சியடையச் செய்கின்றன.

மனவெழுச்சிகளினுள் சினம், துயரம், அச்சம், மகிழ்ச்சி போன்ற உட்கூறுகள் அடங்கும்.

**செவிலி மற்றும் நற்றாயின் மனவெழுச்சி**

**அச்சம்**

மாளிகையில் வளமாக வாழ்ந்த தலைவி தாயையும் தோழியரையும் மறந்து அயலான் ஒருவருடன் சுர வழியில் உடன்போக்கில் சென்றாள் .அவள் சென்ற சுரவழி குறித்து தாய் கூறிய கூற்றுகள் மனவெழுச்சியின் கூறான அச்சத்தின் வழி உள்ளது.

**கொடுங் கோல்**

**உமணர், பகடு தெழி தெள; விளி , நெடும் பெருங்**

**குன்றத்து இமிழ் கொள இயம்பும், (அகம் .17:13-15)**

உப்பு வணிகர் நீர் இல்லாத பாலை நிலத்தின் அறிய வழிகளில் சகடத்தை இழுத்துச் செல்ல இடர்ப்படும் எருதுகளை அதட்டி ஓட்டும் தெளிந்த ஓசை எதிரொலிக்கும் மலைகளைக் கொண்டது.

**தெறுகதிர் உலைஇய**

**வேனில் வெங்காட்டு ,**

**உறுதரு விழுமம்**

**உள்ளாள் ,ஒய்யெனத்**

**பொறிபிதிர்பு எடுத்த**

**பொங்குஎழு கூற கூர்எரிப்**

**பைதுஅறு**

**சிமையப் பயம்நீங்கு ஆர்இடை**

**(அகம் .153:8-11)**

வேனிற் கால சுடுகின்ற கதிரவனின் வெம்மை காய்ந்து கெடுத்த கானகத்தில், வீசும் பெருங்காற்று, தழைத்த மூங்கிலின் கணுக்களை பொருந்தித் தாக்கும்; அதனால்,சிதறி வீழ்ந்த தீப்பொறிகள் தோற்றுவித்த பெரு நெருப்பால் ,பசுமை இழந்த மலை உச்சியை உடைய பயனற்ற சுர வழியைக் கொண்டது.

மேற்கண்ட இந்த இரண்டு பாடல்களிலும் செவிலித் தாய் தனது இளம் மகளின் இளைய அடிகள் கொடுமையான சுரவழியில்சென்ற கொடுமை எண்ணி அச்சம் கொண்ட செய்திகள் காணப்படுகின்றன .

**வருத்தம்**

தலைவன் தலைவியைப் பாதுகாத்து செல்வானோ என்று எண்ணிய செவிலித் தாய் கொண்ட வருத்தம்

**விறல்**

**மிகு நெடுந்தொகை பல பாராட்டி , வறன் நிழல்**

**அசைஇ ,வான் புலந்து வருந்திய மட மான் அசா**

**இனம் திரங்கு மரல் சுவைக்கும் காடு உடன்**

**கழிதல் அறியின் - (அகம் .49:10-13)**

வான் பொய்த்தமையால் மேகத்தை வெறுத்து வருந்திய தளர்ச்சியுள்ள இளைய மானின் கூட்டம் உலர்ந்த மரற் செடியைச் சுவைத்துப் பார்க்கும் தன்மையது அக்காடு. அங்கே வெற்றி மிக்க பெரிய தகுதிப்பாடு உடைய தலைவன் அவளை பலபடப் பாராட்டி உலர்ந்த நிழலிலே தங்கி உடன்கொண்டு போதலை யான் முன்னரே அறிந்தேன் அல்லேன் ,

என்ற கூற்று மூலம் அறியப்படுகிறது .

மேலும் ஒரு பாடலில் மலை சார்ந்த கொல்லைக் காடுகளைக் கொண்ட சுர வழிகள், நெடியவென்று கருதாது ,தனது மெல்லிய சிவந்த அடிகள் வருந்துமாறு செலுத்தற்கு வலிமையுடன் ஆவளோ!

**கொல்லை**

**இரும் புனம் நெடிய என்னாது ,**
**மெல்லென்**
**சேவடி மெலிய ஏக**
**வல்லுநள்கொல்லோ**
**தானே -அகம் .89:17-19**

என்று கூறி வருத்தப்படுகிறாள்.

நற்றாய் தனது மகளை எண்ணி வருந்தி இருந்ததைக் கண்ட அயல் வீட்டுப் பெண்கள் அவளை ஆற்றுவிக்க,அவர்களை நோக்கி

**ஊது**
**உலைக் குருகின் உள் உயிர்த்து,**
**அசைஇ ,**
**வேவது**
**போலும் வெய்ய நெஞ்சமொடு**
**கண்படை பெறேன் ,**
**(அகம் .55:7-9)**

யான் அவளைப் பிரிந்திருந்து உலையில் ஊதும் துருத்தி போல உள்ளம் மெலிந்து பெருமூச்செறிந்தாள் ;தீயில் வெந்து போவது போன்ற வெம்மை கொண்ட நெஞ்சமொடு கண்ணுறக்கம் கொள்ளாது வாய் வெருவி வருந்திப் புலம்பி இருந்தேன் .என்று வருந்துகிறாள்.

**அவாவு நிலை**

ஒருவன் தான் மேற்கொள்ளும் எல்லாச் செயல்களிலும் சிறப்பு மிக்க உயர் சாதனையை அடைய முற்படுதல் இவ்வூக்கியின் இலக்காக அமைகிறது. இவெழுச்சிக்கு ஆதாரங்களாக உயர்நிலைப்பட்ட தன் மதிப்பும் ,தற்கருத்தும் அமைகின்றன. அடைவு ஊக்கி இயல்பாக காணப்படும் ஒன்றன்று. சமுதாயப் பாதிப்பால் விளைவது.

**நற்றாயின் அவாவு நிலை**

உடன் போக்கில் சென்ற தலைவி எத்தகைய துன்பமும் இல்லாது நலமுடன் இருக்க வேண்டுமென விரும்பும் தாயுள்ளம் கொண்டதாக பாடல்கள் அமைகிறது.

**செவிலி மற்றும் நற்றாயின் மனவெழுச்சி**

**அச்சம்**

துளுநாட்டைப் போன்ற நெருங்கிய சேரிகளைக் கொண்ட தலைமையும் பழமையும் கொண்ட ஊர்கள் யாவும் கையிற் பொருளின்றி வரும் முன்பு அறியாத புதயோரைக் காக்கும் பண்பினையறிந்த மக்களைக் கொண்டவாகுக என்று கூறும் அவாவு நிலை அறியப்படுகிறது.

மற்றுமொரு பாடலில் என் மகளை, ஈன்றவள் என்னும் அன்பு காரணமாக, என்பாள் அவன் அருள் செய்யாவிடினும், தலைவியை இடுப்பிலே தூக்கி சுமந்து, கூந்தலை வாரி முடித்து ,அவள் அழகினை மிகுவித்து அழகிய அவள் பெண்மை நலத்தினைப் பேணி காத்துள்ளேன் என்பதை அவன் அறிந்தால் அதுவே மிக நன்றாகும்

**இன்நகை முறுவல்**
**ஏழையைப பல்நாள் ,**
**கூந்தல் வாரி, நுசுப்பு**
**இவர்ந்து,ஓம்பிய**
**நலம்புனை உதவியும்**
**உடையன் மன்னே:(அகம்.195:8-10)**

என்று தனது ஆசை நிலையைக் குறிப்பிடுகிறாள்.

குடவாயிற் கீரத்தனார் பாடல் ஒன்றில்

**துணிந்து, பிறள் ஆயினும், அணிந்து அணிந்து ,**
**ஆர்வ நெஞ்சமோடு ஆய் நலன் அளைஇதன்**
**மார்பு துணையாகத் துயிற்றுகதில்ல (அகம்.35:11-13)**

தனையும் தன சுற்றத்தாரையும் விட்டு சென்றவளி தலைவன் அன்பு மிகுந்து உள்ளத்துடன் பல காலம் அழகு படுத்தி அவளது அழகிய நலனைத் துய்த்து தனது மார்பே பற்றுக் கோடாக அவளைத் துயில செய்ய வேண்டும் என்று தனது ஆசையைக் கூறுகிறாள். என்று இறைவனை வேண்டும் அவாவு நிலையும் அறியப்படுகிறது .

**நினைவு**

1932-ஆம் ஆண்டுக்கு முன்னால் சர் ப்ரெட்ரிக் பார்ட்லெட் என்ற அறிஞர் "நினைவுபடுத்தல் என்பது நாம் பெரும் தகவலைச் சரியாகப் பதிய வைப்பது அல்ல" என்கிறார். மனதில் என்ன இருக்கிறதோ அதனுடன் புதிய தகவலைப் பொருந்துவதும் இதில் அடங்கியுள்ளது என்கிறார். நீண்ட நாள் நம் மனதை விட்டு அகலாமல் நீடிப்பதையே நீண்ட காலம் நினைவு என்கிறோம்.

**செவிலியின் நினைவுகள்**

கயமனார் பாடல் ஒன்றில் ,அன்னையே!என் உடல் வருந்துகிறது என்று கூறி தளர்ச்சியுறுவாள்: அரும்பிய வியர்வை பொருந்திய நெற்றியுடையஅவள் என் மேனி குளிருமாறு என்னைத் தள்ளுபவை என்னிடத்தே தங்குவாள்

**உயங்கின்று அன்னை! என் மெய் என்று அசை,**
**மயங்கு வியர் பொறித்த நுதலள், தண்ணென,**
**முயங்கினள்**
**விதியும்மன்னே!இனியே,**
**அகம்.17:3-5**

மற்றுமொரு பாடலில் தலைவியைப் பார்த்து அவளின் முதுகை தடவி கொடுத்து, நெற்றியை தடவி கொடுத்து, அவளையும் தடவி கொண்டதன்மையெல்லாம் தாய் நினைவு கூர்ந்து பார்க்கிறாள் .

**குறுக வந்து, குவவுநுதல் நீவி,**
**மெல்லெனத் தழீஇயினேனாக, என் மகள்**
**நன்னர் ஆகத்து இடைமுலை வியர்ப்ப,**
**பல் கால் முயங்கினள் மன்னே! அகம்.49:6-8**

இதே போன்று மற்றுமொரு பாடலில் நீண்ட மெல்லிய மூங்கில் போன்ற தோளையும் மாமை நிறத்தினையும் உடையவள் தேனை ஊற்றிக் கலந்த இனிய பாலை யான் அடித்து அச்சுறுத்தி ஊட்டியும் உன்னாதவளாய் கொணர்ந்து பரப்பிய மணலையுடைய பந்தருள் அங்கும் இங்கும் ஓடுவாள் என்று தனது நினைவுகளிக் கூறுகிறாள்.

**மனவெழுச்சி வளர்ச்சி**

மனவெழுச்சி அடிப்படைக்கு கூறுகளான கோபம்,மகிழ்ச்சி,ஆசை இவை போலவே பொதுப்படையான உள்ளக்கிளர்ச்சிகள் ஏதேனும் ஒரு இடத்தில் மிகுதுக் காணும் போது அது மனவெழுச்சி வளர்ச்சி என்ற தனிப் பகுதியாகவே நோக்கப்படுகிறது

செவிலியின் மனவெழுச்சி

தாயின் வருத்தம் மிகுந்து அது புலம்பல் மிகுதியாகி மனவெழுச்சியின் வளர்ச்சி வகையில் உள்ளது.

**------------------------------**

**----------------தந்தை**

**அல்கு பதம் மிகுந்த கடியுடை வயல் நகர் ,**
**செல்வழிச் செல்வழி மெய்ந்நிழல் போல ,**
**கோதை ஆயமொடு ஓரை தழீஇ ,**
**தோடு அமை அரிச் சிலம்பு ஒலிப்ப ,அவள்**
**ஆடுவழி ஆடுவழி,ஆகலேன் மன்னே!**
**அகம்.49:13-18**

இவள் தந்தையதது இட்டு வைத்து உண்ணும் உணவு மிகுந்துள்ள மிக்க காவலியுடைய பெரிய வீட்டின் கண் , செல்லும் இடந்தொறும் உடம்பின் நிழலைப் போல நீங்காது சென்று இருப்பேன் :மாலையையுடைய தோழியர் குழாத்தோடு விளயாடும் விளயாட்டினை மேற்கொண்டு தொகுதி வாய்ந்த பரலினையுடைய சிலம்பும் ஒலிக்கும்படி அவள் விளையாடும் இடந்தொறும் அகலாது இருந்திருப்பேன்:அதுவும் கழிந்ததே என்று புலம்பல் மேலிட கூறி உள்ளாள் .

நற்றாய் கூற்றாக உள்ள மற்றுமொரு பாடலில்

**அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோட் குறுமகள்**
**திருந்துவேல் விடலையோடு வரும் எந் தாயே**
**புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி**
**மனைமணல் அடுத்து மாலை நாற்றி**
**உவந்து இனிது யாரும் என்ப அகம்.195:1-5**

அரிதான சுர நெறியைக் கடந்தது சென்றவள் என்னுதலைவதுன் மீண்டு வறுவல் என்று எண்ணினால் செவிலித்தாய் .அதனால் வீட்டினைப் பலவாறு அழகுபடுத்திக் கொண்டு உள்ளாள் என்று கூறுகிறாள் .

மேற்கூறிய இரண்டு பாடல்களில் நடந்து முடிந்த செயலுக்கு ஏற்பட்ட வருத்தமும் மக்கள் திரும்பி வருவாள் என்ற ஆசையும் மனவெழுச்சியின் வளர்ச்சி கண் உள்ளது

**முடிவுரை**

செவிலியும் நற்றாயும் தனது அன்பு மகள் அயலான் ஒருவனுடன் உடன் போக்கில் சென்றதை அறிந்தவுடன் கோபம் கொள்ளாமல் ,மகளின் வாழ்க்கையில் கேடு விளைவிக்கும் எண்ணம் சிறிதும் கொள்ளாமல் உள்ளனர். அவர்கள் கூறிய கூற்றுகள் அச்சம், வருத்தம், அவாவு நிலை,நினைவு என்ற உளவியல் கூறுகள் வழி இங்கு அறியப்பட்டுள்ளது. மகள் தங்களுடன் இருந்த காலத்தில் ஏற்பட்ட நினைவுகளை நீண்ட கால நினைவுகள் என்ற உளவியல் கூறு வழியும், மகள் சென்ற வழியின் ஏதம் குறித்த அச்சங்களையும், மகளைப் பற்றிய எண்ணி வருந்தியதையம் உளவியல் கூறான மனவெழுச்சி வழியும், இனி வருங்காலதில் மகளுடன் தலைவன் வாழ வேண்டிய முறை பற்றிய ஆசைகளை அவாவு நிலை என்ற உளவியல் கூறின் வழியாகவும் இங்குஅறியப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் தாயானவள் தனது அன்பு மகள் ஏற்படுத்திக் கொண்ட மனம் பொறுக்க முடியாத நிகழ்விலும் மகளின் தன்மையை எண்ணியும் அவளது எதிர் காலத்தை நினைத்து தெய்வத்திடம் முறை இடும் நல் எண்ணம் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர் என்பதும் இங்கு காணப்பட வேண்டிய ஒரு செய்தியாக இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII*, பதிப்பு *21*, ஜூலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சித்திரக்கவியில் அழகன் முருகன்

## கு. திலகவதி
*ஆங்கில பட்டதாரி ஆசிரியர், அ.பெ.மெ.நி.பள்ளி,கோவை*
*முனைவர் பட்ட ஆய்வாளர், கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர், தமிழ்நாடு*

***முன்னுரை***

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒலியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' (கந்தர் அநுபூதி, பாடல்-102)

இலக்கியத்தில் சேயோன் என்று அழைக்கப்படும் அழகன் முருகனின் பெருமையும்,சிறப்பும் பல்வேறு வகையில் குறிக்கப்பட்டிருக்கின்றன.குறிஞ்சி நில மக்களின் தெய்வமான முருகப்பெருமானின் அருள் வேண்டி பல வகையான பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன.தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானை தமிழில் மிக நுணுக்கமான கவிவகைகளுள் ஒன்றான சித்திரக்கவியில் போற்றி பாடியிருக்கின்றனர் நம் புலவர் பெருமக்கள் . சித்திரக்கவியின் சிறப்போடு முருகப் பெருமானின் சிறப்பையும் எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அழகன் முருகன்:**

முருகனின் ஒவ்வொரு அவயங்களின் அழகையும் அற்புதமாய் வருணனை செய்கிறார் பெரும்புலவர் மன்னுமுத்துக் கவுண்டர் கீழ்கண்டவாறு.

''செங்கனி வாயழகும் தீந்தேன் மொழியழகும் பங்கயம் போலும் பதத்தழகும் – துங்கமிகு சோமனுடையழகும் துய்ய முகத்தழகும் தாமப் புயத்தழகும் தாளழகும்-நாமங்கொள் நீல மயிலழகும் நீறணிந்த மெய்யழகும் கோல முறுவல் குளிரழகும்-சாலவும் தித்திக்கும் கட்டழகும் தெய்வ முகமாறிற் பத்தித்த பன்னிரண்டு கண்ணழகும்''

(மருத வரை உலா-151-154))

“ வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை, குகனுண்டு குறையில்லை, கந்தனுண்டு கவலையிலை'' என்பதற்கேற்ப மனமுருகி அழைத்தால் கூப்பிட்டக் குரலுக்கு ஓடோடி வந்து அருள் புரிபவனே முருகப் பெருமான்.சங்க இலக்கியத்துள் பாட்டும், தொகையும் என்றுக் குறிப்பிடப்படும் பத்துப்பாட்டில் முதலாவதாக வைக்கப் பெற்று காப்பு செய்யுள் போல் இருக்கும்

திருமுருகாற்றுப்படையில் ‘‘வீடு பெறுதற்குப் பக்குவமடைந்த ஒருவனை வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது’’ என்ற வகையில் நக்கீரர் முருகப் பெருமானின் சிறப்புகளோடு அவனை சரணடைவதே முற்றிலும் சாலச் சிறந்தது என்று ஆற்றுப்படுத்தியிருப்பார்.

**சித்திரக்கவி:**

‘‘ஆசு மதுரஞ்ச் சித்திரம் வித்தார மாகு நாற்கவி யறையுங் காலே’’ (முத்துவீரியம்,55)

இதில் சித்திரக்கவி என்பது குறிப்பிட்ட ஓவியத்திற்குள் யாப்பு வழுவாமல் பாடல் இயற்றுவதாகும். சித்திரக்கவி அருங்கவி (யாப்பருங்கல விருத்தி உரை.ப.552) என அழைக்கப்படுவதிலிருந்து இதன் தனித்தன்மையை உணரலாம்.பொது நிலையில் சித்திரக்கவி எனும் போது சித்திரத்தில் அமைந்த கவிகள் என்றாலும் மாத்திரை அடிப்படை, எழுத்து அடிப்படை, சொல் அடிப்படை, சீர் அடி அடிப்படை, விடுகவி, வினாவிடை அடிப்படை, திறனறி அடிப்படை, குறிப்பு-வெளிப்படை அடிப்படை, ஓவிய வடிவில் பொருந்த அமைவன என்று பல்வேறு உட்கூறுகளைக் கொண்டுள்ளது .

**சித்திரக்கவியில் முருகப்பெருமான்:**

நாற்கவிகளாகிய ஆசுகவி, மதுரக்கவி, வித்தாரக்கவி, சித்திரக்கவி என்பவற்றுள் சிறப்பிடம் பெறும் சித்திரக்கவிகளில் முருகப் பெருமானின் அருள் வேண்டி அடியார் பெருமக்கள் பல சித்திரக் கவிகளை படைத்திருக்கின்றனர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தமிழில் சித்திரக்கவிகளின் முன்னோடியாக திகழ்கிறார்.அவரைத் தொடர்ந்து திருமங்கையாழ்வார் திரு எழுகூற்றிருக்கை அதை தொடர்ந்து பதினோறாம் திருமுறையில் நக்கீர தேவ நாயனார் பாடிய திருவெழுக்கூற்றிருக்கை சிறப்பிடம் பெறுகிறது. அவறை தொடர்ந்து பல சித்திரக் கவிப் புலவர்கள் தோன்றினார்கள்.அவற்றுள் முருகப் பெருமானைப் பாடியவர்களான அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள்,கிருபானந்த வாரியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**அருணகிரிநாதரின் திருஎழுக்கூற்றிருக்கை சித்திரக்கவி:**

ஏழுப் படிக்கட்டுகளில் ஒவ்வொன்றாக ஏறி நின்று அப்படிக்கட்டில் உள்ள எண்களால் தொகையிட்டுப் பாடி ஏறுவதும், இறங்குவதுமாகப் பாடுவது எழுகூற்றிருக்கை. இது திரு என்னும் அடைமொழியுடன் திருஎழுகூற்றிருக்கை’’ எனப் போற்றப்படுகிறது.

பாடல்:

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி....
.....ஆறெழுத் தந்தணர் அடியினைப் போற்ற
ஏரகத் திறைவ னென இருந்தனையே. (திருப்புகழ் பாடல் 1326)

இப்பாடலில் தேர் தட்டிற்கு சிகரம் வத்தாற் போல் ஒன்றிலிருந்து தொடங்கியிருப்பார் அருணகிரிநாதர். இதற்கு முன்பு ஒன்று இரண்டு ஒன்று என்ற வடிவில் தான் இவை எழுதப்பெற்றிருந்தன. இது புது வகையாக அறிமுகம்



செய்யப்பட்டது இன்னும் ஒருகூடுதல் சிறப்பு.

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

இதில் ஒன்றிலிருந்து ஏழு வரை எண்களில் உள்ள தொகைச் சொற்களில் முருகப் பெருமானின் புகழைப் பாடி பரவசமடைகிறார் அருணகிரிநாதர்.

**பாம்பன் சுவாமிகளின் சித்திரக்கவி:**

பாம்பன் சுவாமிகள் பல வகையான சித்திரக்கவிகளை இயற்றியிருக்கிறார். அதில் பெரும்பான்மையாக முருகப் பெருமானைப் போற்றிப் பாடியிருக்கிறார்.இவர் எழுதிய வேல் பந்தம், மயூர பந்தம், சதுரங்க பந்தம், ரத பந்தம் கமல பந்தம்,துவித நாக பந்தம் போன்ற பல




வகைகளில் கந்தனின் பெருமையையும் சிறப்பையும் ஒரு சேர விளக்கியிருக்கிறார்.

பாம்பன் சுவாமிகள் முருகனின் வேலைத் துதித்து வேல் வடிவில் பாடியிருக்கும் ‘‘சஸ்திர பந்தம்’’இது கவசமாக இருந்து நம்மைக் காக்கும்.நமது எதிர்மறை எண்ணங்களை அழித்து நேர்மறை எண்ணங்களை உருவாக்கும் என்கின்றனர் அடியவர்கள்.

**வாரியார் சுவாமிகளின் சித்திரக் கவி:**

வாரியார் சுவாமிகள் தனது பதினாறாவது வயதில் இயற்றிய சித்திரக் கவிகள் என்னும் நூலில் சிவலிங்கப் பந்தத்தை தவிர அனைத்து பாடல்களையும் சொற் சித்திர வகைப் பாடல்களிலும்,வடிவச் சித்திர வகைப் பாடல்களிலும் முருகப் பெருமானைப் போற்றிப் பாடியிருக்கிறார்.அதிலும் குறிப்பாக முருகனின் வாகனமாகிய சேவல் வடிவத்திலும்,மயில் வடிவத்திலும்,ஆறு நட்சத்திரங்கள் வடிவத்திலும்,ஓம் வடிவத்திலும்,வேல் வடிவத்திலும் படைத்திருக்கிறார்.

**மயூர பந்தம்:**

‘‘ஏறுமயிலேறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
......ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல அமர்ந்த பெரஉமாளே’’

திருப்புகழ் பாடல்-1328

என்னும் திருப்புகழ் கூற்றுப்படி மயிலை வாகனமாகக் கொண்டவனுக்கு மயில் வடிவிலேயே சித்திரக்கவி

புனைந்திருக்கிறார் வாரியார் சுவாமிகள்.

"ஏமனை வீட்டிய பூமகள் காதல னேம்முறு



மாமரு காநற் கிடைச்சந் தநகா மகத்துவனே
சாமளம் விஞ்சழ கார்சச் சசமத் தகிட்டமிக்க
வாமநல் வார்களத் தொல்லிசை மாமயில் வாகனனே."

மயில் வடிவத்தில் கட்டளை கலித்துறையில் எழுதப் பட்ட இப்பாடலில் ,இரணியனைக் கொன்றவனும்,மலைமளாகிய மகாலட்சுமியினுடைய நாயகனாகிய மாயவன் ஏமமுறு மாமருகா, மேன்மையுடையவனே, பச்சை நிறம் மிகுந்த அழகுடையதும், உண்மையானதும், அன்பு மிகுந்ததும், அழகும் நன்மையும் பொருந்தி நீண்டுள்ள கழுத்துடையதும், பழமையான புகழுடையதுமான மயிலை வாகனமாகக் கொண்ட பெருமானே! இந்த சித்திரக் கவியில் மயில் வடிவத்திலேயே மயிலை வாகனமாகக் கொண்டவன் என்று நிறைவு செய்திருப்பது வியப்பளிக்கிறது.

**சேவல் பந்தம்:**

"வேலவிதி போற்று விசயசவி சங்கரிதன்
பாலகுரு நாதவருட் பாவகியே – மூலமணி
தேவர்க் கிறைவகுக தேறுதமிழ்ச் சிற்பரனே
சேவற் றுவசவர சே."

வேலாயுதனே,பிரம தேவன் பணியும் வெற்றியையுடையவனே ,அழகிய சிவகாம சுந்தரி அருளிய குமரக்



கடவுளே,கருணை நிறைந்தவனே,அக்னி வடிவானவனே,ஆதி முதலாகிய மணியே, இதயக் கமலத்தில் வசிப்பவனே,தமிழ் கடவுளே,சேவல் கொடியுடைய தெய்வசிகாமணியே என்று சேவலின் வடிவத்திலேயே சேவல் கொடியுடையவனை சிறப்பித்துப் பாடியிருக்கிறார் வாரியார் சுவாமிகள்.

**சரவணபவ எனும் திருமந்திரம்:**

நாணல் சூழ்ந்த பொய்கையில் உதித்தவன் என்னும் பொருளில் சரவணபவன் என்று அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு சண்முகன் அதாவது ஆறுமுகன் என்னும் பெயருண்டு.ஆறு கார்த்திகைப் பெண்களாலே வளர்க்கப்பட்ட குமரனுக்கு வழிபாட்டிலே அறு கோணச் சக்கரம் பயன்படுத்தப்படுகிறது .இச்சக்கரம் சம அளவுள்ள இரண்டு சம பக்க




முக்கோண்ங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக நேர் எதிர் திசையில் படியுமாறு அமைக்கப்பட்டிருக்கும். இரண்டு முக்கோணங்களுக்கு நடுவில் அமைந்துள்ள புள்ளி உயிர்சக்தியாக கந்தன் எனக் கொள்ளப்படுகிறது.ஆறு முக்கோணங்களில் ச ர வ ண ப வ என்னும் ஆறு எழுத்துகளும்,நடுவில் ஓம் என்னும் பிரணவ மந்திரமும் எழுதப்பட்டிருக்கும்.நினைத்ததை நிறைவேற்றித் தரும் தாரக மந்திரமாக சரவண பவ மந்திரம் குறிப்பிடப்படுகிறது.

**சடாக்கர பந்தம்:**

சடாக்கர பந்தம் என்னும் இந்த சித்திரக் கவியில் சரவணபவ எனும் மந்திரத்தோடு முருகனைப் போற்றிப் பாடியிருக்கிறார் வாரியார்



சுவாமிகள்.

“திருவளர் கனக மார்பன் திதியர் கனக மாற்றன்
மருமகக் கருணை மாற்றன் மருளுறு வயல்வாழ் மன்னா
மருளுறு வசைய றுத்தார் வரமருள் வசைய றுத்தூய்த்
திருமுக வரத வத்தூய்த் திருவளர்க் குமர மூர்த்தி”

இந்தப் பாடலில் வாரியார் சுவாமிகள் முருகப் பெருமானோடு சிவனையும் திருமாலையும் சேர்த்து பாடியிருப்பதோடு முருகப் பெருமான் உறந்திருக்கக் கூடிய வயலூரையும் தரும குணமுடையவர் உறைவிடம் என சிறப்பித்திருக்கிறார்..இலக்குமி தேவி உறையும்,பொற்பணிகளநிந்த திருமார்புடையவனும்,காக்குந்தஒழில் புரிபவனுமான திருமாலுடைய மருமகனனே,தரும குணமுடையவர் உறைவிடமாகிய வயலூரில் வாழ்வுற்றுறையும் பெருமானே,சிபெருமானுடைய குருவானவனே,ஆறுமுகக் கடவுளே, தெய்வீகத் தன்மையுயரும் ஆகிய குமார மூர்த்தியே என்றுப் போற்றிப் பாடியிருக்கிறார் வாரியார் சுவாமிகள்.

**முடிவுரை:**

“செந்தமிழில் உனையே வணங்கு தென்றல் வரை முநி நாரதர்ன்று கும்பிட நலருளே பொழிந்த தென்பழனி மலைமேலுகந்த பெருமாளே” (திருப்புகழ் -185)

உலக மாயையில் சிக்கித் தவிக்கும் உயிர்களைக் காக்கும் கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாம் முருகப்பெருமானின் புகழை, அவன் சிறப்பை, அருளை அடியவர்கள் பலரும் பாடியிருப்பினும்,நுணுகியவற்றுள் நுண்ணிய அறிவு பெற்றவர்களால் மட்டுமே இயற்றப்படக் கூடிய

சித்திரக் கவிகளில் பாடப்பட்டிருக்கும் பாடல்களை அதிலும் குறிப்பாக முருகப் பெருமானோடு தொடர்புடைய வடிவங்களில் பாடப்பட்ட சித்திரக் கவிகளை எடுத்துக் காட்டுவனவாக இக்கட்டுரை அமைகிறது.

**துணைநூற்பட்டியல்:**


1. திருப்புகழ்,திருமுருக கிருபானந்த வாரியார், வானதி பதிப்பகம், சென்னை,2008.
2. மருத வரை உலா மூலமும் உரையும், மன்னமுத்துக் கவுண்டர், உரியாசிரியர் கயிலைமணி திலகவதி சண்முகசுந்தரம்,பி.வி.கிராபிக்ஸ், கோவை,2019.
3. சித்திரக்கவிகள், பதிப்பாசிரியர் வே.இரா. மாதவன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,1983.
4. சித்திரக்கவிகள், திருமுருக கிருபானந்த வாரியார், குகஸ்ரீ பதிப்பகம்,சென்னை,2015.
5. ஆறு மண்டலங்களாகிய 6666 பாடல்களின் தொகுப்பு, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், ஸ்ரீமத் பாம்பன் பிரிண்டர்கள், சென்னை,2009.
6. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், ஆல்பினியன் பதிப்பகம், சென்னை, 1889.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி கோட்பாடுகள்

**முனைவர் ந.சரஸ்வதி**
உதவிப் பேராசிரியர், தன்ராஜ் பெய்த் ஜெயின்கல்லூரி, துரைப்பாக்கம், சென்னை

***முன்னுரை***

கற்பனை வளமும், கருத்துச்செறிவும் மிக்க பாடல்கள் பலவற்றைப் பெற்று, எக்காலத்தும் ஒளிர்வன நம் தமிழ் இலக்கியங்கள். சங்ககாலம் முதலாக நம் முன்னோர்கள், சிறந்த கொள்கைகளையும், நீதிகளையும் பின்பற்றி, சமுதாயத்தில் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்ததை நம் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அவ்வகையில், தமிழ் இலக்கியங்களில் சமூக நீதி கோட்பாடுகள் விரவி உள்ளதை அலசும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

நல்லவர்களாக இருக்கவேண்டும்:

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. புறம் –187

நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், தாழ்ந்த நிலமாக இருந்தாலும், மேடான நிலமாக இருந்தாலும் எவ்விடத்தில் ஆடவர் நல்லவராய் இருக்கின்றாரோ, அவ்விடத்தில் நிலமும் மேன்மை பெறும் என்று அவ்வையார் கூறுவதன் மூலம், சமுதாயம் மேன்மையடைய வாழும் மக்கள் நல்லவர்களாக இருக்கவேண்டும் என்ற நீதி புலப்படுகிறது.

**தண்டனை:**

பிறர் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறும் வள்ளுவர், மக்கள் தவறிழைத்தால் மன்னன் தண்டனை வழங்குவது குற்றமாகாது என்னும் நீதியைப் பின்வரும் குறட்பாக்களின் வழி நிறுவுகிறார்.

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று' வேந்தன் தொழில்.
(குறள்- 549)

கொலையில் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர். (குறள்- 550)

**அனைவரும் சமம்:**

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா...
பெரியோரை வியத்தலும் இலமே!
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே! புறம் – 192

யாதும் ஊரே, யாவரும் உறவினரே! தீமையும் நன்மையும் பிறரால் தரப்படுவன அல்ல' வாழ்தலை இனிது என்று

மகிழ்வதுமில்லை' வெறுப்பின் காரணமாக வாழ்வு இனியதன்று என்று வெறுப்பதுமில்லை··· என்று கணியன் பூங்குன்றனார் கூறுவதன் மூலம், வாழும் போதே, நல்லவராக வாழவேண்டும் என்ற நீதியையும், தம்மை விட மேலானவரைப் போற்றித் துதித்தலுமில்லை' கீழானவரைச் சிறுமையாய் நடத்துவதுமில்லை என்பதால், அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்ற நீதியையும் இப்பாடல் உணர்த்துகிறது.

தீமை செய்யக்கூடாது:

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி
னதுதான்... புறம் – 195

வயதான முதியோரைப் பார்த்து, "எமன் உயிர் பறிக்க வரும் காலத்தில் வருந்திப் பயனில்லை' உயிருடன் வாழும் காலத்தில் பிறருக்கு நல்லது செய்ய இயலவில்லை என்றாலும், தீயது செய்தலையாவது கைவிடுங்கள்' அதுவே உங்களை நற்கதிக்குச் சேர்க்கும் வழியும் ஆகும்" என்று நரி வெரூஉத் தலையார் கூறுவதன் மூலம், பிறருக்கு நன்மை செய்யவில்லை என்றாலும், தீமை செய்யக்கூடாது என்ற நீதியை இப்பாடல் உணர்த்துகிறது.

நீரின்றி அமையாது உலகம்:

நீர் இன்று அமையா யாக்கைக்கு
எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்
கொடுத்தோரே···புறம் – 18

உடம்பில் உயிர் இருக்க வேண்டும் என்றால் உணவு வேண்டும்' நிலத்தில் நீரைச் சேர்த்து வைத்தால் உணவுப்பொருளின் விளைச்சலைப் பெருக்கலாம். எனவே, நிலத்தில் நீர் தங்கும்படி சேமித்து வைத்தவர்- உடலில் உயிரைப் படைத்தவர் ஆவார் என்று குடபுலவியனார் கூறுவதன் மூலம், நீர் நிலைகளைப் பெருகச் செய்வதன் இன்றியமையாமையை உணர்த்துகிறார்.

'நீர்இன்று அமையாது
உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது
ஒழுக்கு' (குறள் 20)

என்னும் குறளுக்கு இப்பாடல் சான்றாகிறது.

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு
எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்
தோரே"
என்று மணிமேகலையும்
இக்கருத்தை வலியுறுத்துகிறது.

வாழ்த்தும் உள்ளம்:

ஈஎன இரத்தல் இழிந்தன்று, அதன்
எதிர்
ஈயேன் என்றல் அதனினும்
இழிந்தன்று···
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப்
பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர் வேட்டோரே'
புறம் – 1

'பிச்சை எடுத்தல் இழிவான செயல் இல்லை' அதைவிட இழிவான செயல் பிச்சை இடாமல் இருப்பது. பிறருக்குக் கொடுத்தல் உயர்வான செயல் இல்லை' அதைவிட, கொடுப்பதை வேண்டாம் என்று மறுப்பதே உயர்வானது. கடலில் நீர் நிறைந்து இருந்தாலும், அது குடிப்பதற்குப் பயன்தராது. ஆனால், பசுக்களும், பிற விலங்குகளும் நீர் அருந்தும் சேறு நிறைந்த குளம் ஆனாலும், மக்கள் அந்தக் குளத்து நீரையே அருந்துவர். வல்வில் ஓரி பரிசில் வழங்காமல் இருந்த போதும், அவனைக் குறை கூறாமல், தாங்கள் புறப்படும்

வேளையில் சகுனங்கள் சரியில்லை' தங்களின் நேரம்தான் சரியில்லை என்றும் கூறி, வாரி வழங்கும் வல்வில் ஓரியே! நீ நீடுழி வாழ்க!" என்று கழைதின் யானையார் பரிசு தராத வள்ளலை இகழாமல் வாழ்த்துகின்ற உள்ளத்தை அறிய வைக்கிறார்.

சான்றோர் அறிவுரை:

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும்
ஊரே. புறம் - 191

வயதான போதும், நரை இல்லாமல் எப்படி வாழ இயல்கிறது? என்பவரிடம் பிசிராந்தையார், "என் மனைவி நற்குணங்கள் நிரம்பியவள்' என் பிள்ளைகளும் அறிவு நிரம்பியவர்கள்' பணி செய்யும் ஏவலரும் என் மனமறிந்து செயல்படுகின்றனர்' அரசனும், கவலையின்றி வாழ வைக்கிறான்' இவை மட்டுமின்றி, ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை மிக்க சான்றோர் வாழும் ஊர் இது' இவர்கள் தக்க அறிவுரைகள் தந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றனர்" என்பதன் மூலம், சான்றோர்கள் அறிவுரை கூறுபவர்களாக இருந்த சமூக நீதியை இப்பாடல் கூறுகிறது.

**கல்வியின் சிறப்பு:**

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே. புறம்- 183

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் தன் பாடலில் கல்வியின் சிறப்பை மிக அழகாகப் பாடியுள்ளார். பெற்ற தாயும், கல்வியில் சிறந்த மகனைத்தான் விரும்புவாள் என்றும், ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் பலர் இருந்தாலும், மூத்தவன் என்று மதிப்பு தராமல், கல்வியில் சிறந்தவன் இளையவனாக இருந்தாலும் அவன் கூறும் வழியைப் பின்பற்றி அரசனும் செல்வான் என்றும், எனவே உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே என்று கல்வி கற்கும் நிலையை- கல்வியின் சிறப்பை இப்பாடலின் வழியாக அறிய முடிகிறது.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"
என்னும் அதிவீரராம பாண்டியரின்
பாடல்வரிகள் இங்கு ஒப்பு
நோக்கத்தக்கது.

கடமை உணர்வு:

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நல்நடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் உருக்கி
களிறு எறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே புறம்-312

நம் முன்னோர்கள் கடமையுணர்வோடு வாழ்ந்தவர்கள்' சமுதாயத்தில் ஒவ்வொருவரும் என்னென்ன கடமைகளை ஆற்றவேண்டும் என்பது பற்றிய செய்திகளை அழகாகப் பொன்முடியார் பட்டியலிடுகிறார். முத்தாய்ப்பாக, காளையாகிய இளைஞனின் கடமை நாட்டிற்காகப்

போரிடுவது என்ற நீதியையும் பெற வைக்கிறார்.

**நன்றி மறவாமை:**

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என
அறம் பாடிற்றே ஆயிழை
கணவ··· புறம் - 34

அறங்களை நாள்தோறும் விரும்பிச் செய்யவேண்டும் என்பது நம் முன்னோரின் வாழ்வியல் நெறி ஆகும். மாறாக, அறங்களை ஆற்றாமல் சிதைத்தல் மன்னிக்க முடியாத பெரிய குற்றமாகக் கருதப்படும். பசுவின் மடியை அறுத்தல், தாலியணிந்த மகளிர் தம் கருவைச் சிதைத்தல், குரு துரோகம் போன்றவற்றைக் 'கொடிய பாவங்கள்' என்று கூறும் இப்பாடலில், ஒருவன் இதுபோன்ற பேரறங்களைச் சிதைத்தாலும் கூட 'பாவம்' என்னும் நரகத்திலிருந்து மீண்டுவிடலாம்' ஆனால், ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தவனுக்கோ எவ்வகையிலும் அப்பாவத்திலிருந்து நீங்கும் நிலை என்பது ஒருபோதும் ஏற்படாது என்று ஆலத்தூர் கிழார் தம் பாடலில் கூறுவதன் மூலம்,

'எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற
மகற்கு' (குறள்-110)

என்னும் வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப மக்கள் அனைவரும் 'நன்றிமறவாமல் வாழவேண்டும்' என்னும் நீதியைப் பெற வைக்கிறார்.

**ஈதல்:**

யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்க இவன் கடும்பினது
இடும்பை... புறம் - 173

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், தன்னுடைய வாழ்நாளையும் சேர்த்துக் கொண்டு, தங்கள் பசிப்பிணி போக்கும் மருத்துவனாகிய சிறுகுடி கிழான் பண்ணன் வாழவேண்டும் என்று பாணன் ஒருவன், பண்ணனை வாழ்த்துவதாக இப்பாடலில் பாடியுள்ளார்.

உண்பது நாழி உடுப்பவை
இரண்டே···
செல்வத்துப் பயனே ஈதல்··· புறம்-189

என்னும் சமூக நீதியை நக்கீரரும் அறிவுறுத்துகிறார். "வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இணங்க இப்பாடல்கள் அமைந்துள்ளன.

**இசைபட வாழ்தல் :**

புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்' பழிஎனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர்'அயர்விலர்'
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை
யானே. புறம் - 182

அமிழ்து கிடைத்தாலும், சான்றோர்கள் தனியாக உண்ணாது பிறர்க்கும் கொடுத்து உண்பர்' அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்வர்' புகழ் கிடைப்பதாக இருந்தால் தம் உயிரையும் கொடுப்பர்' பழி வருவதாக இருந்தால், உலகம் முழுதும் கிட்டுவதாயினும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்' தமக்கென்று வாழாமல் பிறருக்காக வாழ்கின்ற இவர்கள் இருப்பதால்தான், இவ்வுலகம் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கடலுள்

மாய்ந்த இளம்பெருவழுதி பாடுவதன் மூலம், "பழிக்கு அஞ்சவேண்டும்" என்ற சமூக நீதியைப் புலப்படுத்துகிறார்.

**நல்லாட்சி:**

நெல்லும் உயிரன்றே' நீரும் உயிரன்றே'
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்··· புறம் -186

மோசிகீரனார் தம் பாடலில், மக்கள் சிறந்தவராயினும் ஆட்சி செய்யும் மன்னன் சிறப்புற ஆட்சி செய்யவில்லை என்றால், நாட்டில் நிம்மதி இருக்காது' நெல்லும் வாழ்வளிக்காது, நீரும் உயிர் கொடுக்காது என்பதுணர்ந்து நல்லாட்சி தருமாறு மன்னனுக்கு அறிவுரை கூறுகிறார். ஒரு நாட்டில் எல்லா வளங்களும் இருந்தாலும், மன்னன் சிறப்பாக ஆட்சி புரிய வில்லை என்றால், அவ் வளங்களால் யாதொரு பயனுமில்லை என்று வள்ளுவரும் பின்வரும் குறள் மூலம் அறிவுறுத்துகிறார்.

'ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு' (குறள்- 740)

**குற்றம் கடிதல்:**

யானை புக்க புலம் போல தானும் உண்ணான்
உலகமும் கெடுமே! புறம்-184

பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பியிடம், மக்களின் வருவாயறிந்து மன்னன் வரி விதித்தால், கோடிக்கணக்கில் செல்வங்களைப் பெற்று நாடு தழைக்கும். அவ்வாறின்றி, அதிக அளவில் வரி விதித்தால், யானை புகுந்த நிலத்தைப்போல, தானும் பயனடையாமல், அந்நாடும் கெட்டழியும்' மக்களிடம் அதிகமாக வரி சுமத்தி வந்த நிலையில், அவன் செய்கை தவறு என்று மன்னனுக்கு அறிவுரை கூறுவதன் மூலம்,

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும்
கெடும்' (குறள்- 448)

என்னும் குறளுக்கு இப்பாடல் சான்றாகிறது.

**தன்மான உணர்வு:**

மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே'
எத்திசைச் செலினும்
அத்திசைச்சோறே.

தனக்குப் பரிசில் தர அதியமான் காலம் தாழ்த்திய போது, அவ்வையார் வாயிற்காவலனிடம், "விறகு வெட்டிப் பிழைக்கும் வலிமை கொண்ட சிறுவர்கள் கையில் கோடாரியும் இருக்கிறது' காடும் இருக்கிறது. அதைப்போல, பரிசிலராகிய நாங்களும் எந்தப்பக்கம் சென்றாலும் சோறு பெறுவோம்" என்று கூறுவதன் மூலம், அவ்வையின் தன்மான உணர்வு இப்பாடலில் புலப்படுகிறது.

எழுஇனி' நெஞ்சம்! செல்கம்' யாரோ' ...
பெரிதே உலகம்' பேணுநர் பலரே'··· புறம் - 207

முகம்மலர்ந்து உபசரியாமல், பெயருக்குச் சிறிது பொருளைப் பரிசாகத் தந்த இளவெளிமானின் செயல் கண்ட புலவர் பெருஞ்சித்திரனார், அவனது சிறுமையை நினைத்து வருத்தமடைந்து, அவன் கொடுத்த பொருளைத் தீண்டாமல், தரமறிந்து உதவும் நல்லோர் பலர் உள்ளனர்' தகாதவனிடம் வந்தது தன்னுடைய தவறு என்று தன் மனதிற்குக் கூறி

வெளியேறியதாக இப்பாடல் கூறுகிறது.

‘மோப்பக் குழையும் அனிச்சம்
முகம்திரிந்து
நோக்கக் குழையும்
விருந்து’ (குறள் 90)

என்னும் குறளுக்கு இப்பாடல் சான்றாகிறது.

” தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு”

என்னும் நாமக்கல் கவிஞரின் பாடல் வரிகள், நம் முன்னோர்களின் அறச்செய்கைகளையும், நற்குணங்களையும் பறைசாற்றுவதை அறிந்து, நாம் ஒவ்வொருவரும், தமிழன் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

**மக்கட்பேறு:**

‘எழுபிறப்பும் தீயவை வேண்டா
பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்’

பழி இல்லாத நல்ல பண்புகளை உடைய பிள்ளைகளைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழுபிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேராது’ பெறுகின்ற செல்வங்களுள் அறிவறிந்த மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம் வாழும்
நாளே புறம்- 188

என்று பலரோடு கூடி உண்ணும் பெருஞ்செல்வர் ஆயினும், இல்லறத்தின் பயனாகிய மக்கட்பேறு, நிறைவான வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது என்ற நிலையை இப்பாடல் உணர்த்துகிறது.

**பார்வை நூல்கள்:**

திருக்குறள், புறநானூறு, மணிமேகலை, வெற்றிவேற்கை

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII*, பதிப்பு *21*, ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நீதி இலக்கியங்களில் சமூக நீதி சிந்தனைகள்

**முனைவர். தே. ஷீஜா**
உதவிப் பேராசிரியர், மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில்

***முன்னுரை***

சமூகநீதி காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே வருகிறது. இயற்கையாக மனிதனுக்குள்ளே புதைந்துள்ள தெய்வீகமான பூரண உண்மையை வெளிக்கொணர்வதே சமூக நீதியாகும். சமூக நீதியுடையவன் தளர்ச்சியடைந்தாலும் மீண்டும் தன்னுடைய ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும் உயர்ந்த நிலையை அடைவான். ஆனால் நீதியற்றவன் மீண்டும் எழுதல் அறியாது வீழ்ந்து போவான் என்னும் கருத்தினை நீதி இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளது. உலகில் ஏற்றத் தாழ்வுகளை அகற்றி அனைவரையும் மேன்மையடையச் செய்வது சமூக நீதியாகும். கைப்பொருள்கள் களவாடப்படலாம். ஆனால், எப்பிறப்பிலும் அழியாது துணைபுரிகின்ற செல்வம் என்பது "நீதியாகும்" என்பதனை அற இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். நீதியில்லாதவர்களுக்கு அணிகலன்களே அழகு. நீதியுடையயோர்க்கு அவர்களின் நற்பண்பே அணிகலனாகும். இதனை நீதி நூல்களின் வழி ஆராய்ந்து தெளிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஒழுக்கம் தரும் சமூக நீதி

மனிதன் நன்னெறியில் இடையறாது ஒழுகுவதே ஒழுக்கம் என்று போற்றப்படுகிறது. நீதி நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கென ஒழிதலுமாம். அ∴து ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரம்மசரியம் முதலிய நிலைகளில் நின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல் என்று விளக்கியுள்ளார்.

மனதில் பொறாமையுணர்வு, அவா, வெகுளி ஆகிய தீய உணர்ச்சிகள் தோன்றாமல் பார்த்துக் கொள்வதோடு, அவ்வுணர்ச்சிகளின் உந்துதலால் கடுமையான சொற்கள் தோன்றாமல் காத்து ஒருவன் நடப்பதே வள்ளுவர் காட்டும் சமூக நீதியாகும்.

''அழுக்காறு அவாவெகுளி
இன்னாசொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்
''அறஞ்சாரான் மூப்பே போல்'' –

குறள் - 35

ஒழுக்கம் உடைமையாவது தான் கடைபிடித்த நன்னெறியை மறவாமல் மரணம் வரை கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”
– குறள் - 131

என்று வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவனுடைய வாழ்க்கைக்கு நீதிசெய்வதை விட நன்மையானது வேறொன்றும் இல்லை. அதை மறந்து விட்டு இருப்பதை விட கேடு தருவது வேறொன்றும் இல்லை. அதனால் முடிந்தவரையில் நாள் தவறாமல் அறம் செய்து கொண்டே இருக்க வேண்டும். தான் செல்லக் கூடிய இடங்களிலெல்லாம் அறம் செய்தல் வேண்டும். இளைஞராக இருக்கிறோம் என்று நினையாமல், பொருள் இருக்கும் போதே மறைக்காமல் அறத்தைச் செய்யுங்கள். இப்போது இன்பங்களை அனுபவித்து வயது முதிர்ந்த பின் நல்லறங்களைச் செய்து கொள்வோம் என்று நினையாமல் பொருள் கிடைத்த போதே அறம் செய்ய வெண்டும் என்பதனை,

“மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது
கைத்துண்டாம் போர்தே கரவா – கறம் செய்ம்மின்
முற்றி யிருந்த கனிமொழியத் தீவளியால்
நற்காய் உதிர்த்தலும் உண்டு”

என்ற பாடலடிகளின் வாயிலாக நாலடியார் சமூகநீதியை வலியுறுத்தியுள்ளது.

**பெண்களை மதிப்பதினால் வரும் சமூக நீதி**

பெண்களுக்கு உயர்வு கொடுக்க வேண்டும். பெண்களைச் சிறப்புடன் போற்றும் சமுதாயமே சிறந்த சமுதாயம். அதுவே அறக்கோட்பாடுகள் விளையக் களம் அமைத்துக் கொடுக்கும். தனக்கு வாய்த்த மனைவியை மட்டுமே உரிமை கொண்டாட வேண்டுமே தவிர பிற பெண்களைச் சகோதரியாக நினைக்கும் குணம் வேண்டும். இதனை நீதிவெண்பா கூர்மையான அறக்கோட்பாட்டாக உணர்த்தும் பொருட்டு,

“தன்னை யளித்தா டமையன் மனைவிகுருவின்
பன்னியரசன் பயிறேி தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்”
– நீதிவெண்பா - 42

என்னும் பாடலில், ‘தன்னைப் பெற்றெடுத்த தாய், தம்பியின் மனைவி, ஆசானின் மனைவி, அரசனின் இல்லத்தரசி, தன்னுடைய மனைவியைப் பெற்றெடுத்தவள் என்னும் ஐவரும், எல்லோருக்கும் பெற்றெடுத்தற் தாயைப் போன்றவர்கள் என்று குறிப்பிடுகிறது. இக்கருத்தையே திருக்குறளும் போதிப்பதை அறிய முடிகிறது.

**விருந்தோம்பலினால் வரும் சமூகநீதி**

சங்க காலத்தில் மக்கள் பொருளையெல்லாம் இழந்து வறுமையுற்ற நிலையிலும் விருந்தினர் வருவாரானால் அவர்களை இன்முகத்துடன் ஓம்புதலைக் கடமையாகக் கொண்டிருந்தனர். வறுமையுற்று

விருந்தோம்பாத நிலையிலும் முதல் நாள் தன் பழையவாளை விற்றும் அடுத்த நாள் யாழை அடகு வைத்தும் விருந்தோம்பினான் என்பதை,

“பொருநை வந்த விருந்திற்கு
மற்றுத்தன்
இரும்புடைப் புழவாள் வைத்தானன்
கின்றுகிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையாம்

என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.

பழந்தமிழரின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளில் விருந்தினரைப் பேணுதல் இடம் பெறுகிறது. வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்க்கு அவர் மகிழும் வண்ணம் அமிழ்து படைத்து தம் அன்பை வெளிக்காட்டுவது தமிழர்தம் பண்பாகும். கழுநீரினுள் இருந்த கீரை உணவு உள்ளன்பு உடையவரால் சமைத்துப் பகிரப்படின் அது அமிழ்தத்திற்கு நிகராகும். உள்ளன்பு இல்லாதார் கொடுக்கும் உணவு சமைத்த கலந்த வெண்சோறாக இருந்த போதிலும் எட்டிக்காய் போலக் கசக்கும் என்பதை,

கழுநீருள் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்
தாம் விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே
யாயினும் மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்”

விருந்தினரைப் பேணுதலே சிறந்த சமூகநீதி என நாலடியார் அறிவுறுத்துகிறது.

**கற்றோரினால் வரும் சமூகநீதிபண்பு**

பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகள் அறியும். அதுபோல கல்வி மிக்கவரது அறிவினை ஆராய்ந்து அறிதல் அறிவு மிக்கவர்க்கே உரியதாகும் என்பதனை,

“புலமிக்கவரைப் புலமை தெரிதல்
புலமிக்கவர்க்கே புலனாம் -
நலமிக்க
பூம் புனலூர பொது
மக்கட்காகாதே
பாம்பறியும் பாம்பின் கால்”
– பழமொழி நானூறு - 7

என மூன்றுரை அரையனார் கூறுகின்றார்.

“கற்ற அறிவினரைக் காமுறுவர்
மேன்மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே”
– நன்னறி - 35

பாடலின் வாயிலாகக் கல்வி கற்ற அறிவுடையவர்களைக் கற்றவர்களே அறிந்து கொள்வர். மற்றவர்கள் என்றும் கற்றவரின் மேன்மையினை அறிந்து கொள்ளமாட்டார்கள் என்கிறது நன்னெறி.

கல்வி கற்றவர்களிடத்தில் சொற்சோர்வு கூடாது என்பதனை, ‘சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே’ எனும் அடியால் உணர்த்துகின்றார். கல்வியறிவு கூடிய சபையைச் சிறக்கும்படிச் செய்கின்ற சொற்செல்வம் கற்றவரிடம் உண்டு என்பதனைக் குமரகுருபரர்,

“மல்லல் வெறுக்கையா மாண்
அவை மண் உறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு”

என்ற நீதிநெறிவிளக்கப் பாடலின் மூலமாக சமூகநீதியெனும் நற்பண்பை உணர்த்தியுள்ளார்.

**கேள்வியறிவினால் வரும் சமூகநீதி**

‘நூற்பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டல்’ என்பர் பரிமேலழகர். அனைத்து நூற்களையும் கற்க இயலாதவர் அந்நூற்களின் கருத்துக்களைக் கற்றவர் கூறக் கேட்க வேண்டும். நாமே பேசிக் கொண்டிருப்பதை

விட மற்றவர் பேசுதலைக் கேட்டுக் கவனித்தல் வேண்டும். நல்லவனவற்றையே கேட்க வேண்டும் எனும் சமூகநீதியை வற்புறுத்தியுள்ளார்.

“செவியுணவின் கேள்வி
உடையார், அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர், நிலத்து” –
குறள் 413

செவிவழி அறிவு உணவைப் பெற்று உயர்ந்த சான்றோர், பூவுலகில் வாழ்ந்தார் எனினும் மேலுலகில் வாழும் தேவர்க்கு நிகரானவர்கள் என்பதனை குறளின் வழி அறியலாம்.

“செவியின் சுவை உணரா, வாய்
உணர்வின் - மாக்கள்
அவியினும் வாழினும் எமன்” –
குறள் 420

செவியின் பயனை அறியாது, வாயின் பயனை மட்டும் அறிந்து கொண்ட மக்கள் வாழ்ந்தால் என்ன, வீழ்ந்தால் என்ன என்று வள்ளுவர் கடிந்துரைப்பதையும் அறிய முடிகிறது.

**அரசியலில் சமூகநீதி**

மன்னன் என்பவன் ஒரு குடையின் கீழ் மக்களை வைத்து ஆட்சி செய்து முறையாக தீர்ப்புகளை வழங்கி ஆட்சியமைப்பினைச் சிறப்பாக அமைத்தல் வேண்டும். சூழ்நிலைக்களுக்கேற்ப நடுவுநிலைமையிலிருந்து பின்வாங்காமலிருக்க வேண்டும். தவறுகின்றபோது மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்து சிதறுவது போன்று மன்னருடைய குடும்பமே அழிந்துபோகும். நாட்டை ஆட்சி செய்கின்ற மன்னருக்கு அடிப்படைத் தகுதிகளும், பண்புநலன்களும் இருத்தல் அவசியமாகிறது.

முறையான தீர்ப்பினை வழங்காமல் அநீதியான தீர்ப்பினை வழங்குகின்றவரது வாழ்க்கையானது கேள்விக்குறியாக மாறிவிடும். இதனையே,

“மண் நின்று மண் ஓரம் சொல்ல
வேண்டாம்
மனம் சலித்துச் சிலுகிட்டுத் திரிய
வேண்டாம்
கண் அழிவு செய்து துயர் காட்ட
வேண்டாம்
காணாத வார்த்தையைக்
கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச்
சொல்ல வேண்டாம்
புறஞ் சொல்லித் திரிவாரோடு
இணங்க வேண்டாம்
மண் அளந்தான் தங்கை உமை
மைந்தன், எம்கோன்
மயில் ஏறும் பெருமாளை
வாழ்த்தாய் நெஞ்சே” –
நீதிகளஞ்சியம் - 51

என்னும் உலகநீதிப் பாடலில் நடுவுநிலைமையான தீர்ப்பு வழங்கினால் ஏற்படும் நிலைமையினை விளக்குகிறது. நிலத்தகராறில் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பு கூறுதல் கூடாது. உள்ளம் சலித்துச் சண்டையிட்டு கொள்ளுதல் கூடாது. அழுது காரியம் சாதிக்க முயலுதல் தவறு ஆகும்.

கண்ணில் காணாததையும், காதால் கேளாததையும் கற்பனை செய்து பரப்புதல் கூடாது. பிறரின் மனம் புண்படும்படியாகப் பேசுதல் கூடாது. கோள் சொல்லுவாரோடு நட்பு கொள்ளுதல், மேலும் வேறு எந்தவிதமான குற்றங்களையும் செய்தல் கூடாது என்பதனை உலகநீதி தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளது.

மன்னன் நீதி தவறியதால் புதிய சட்டத்தினைக் கொண்டு வருகின்றான். இதனை,

"சிறைப்படு கோட்டம் சிமின்! யாவதும்!
கறைப்படு மாக்கள் கறைவிடு செய்ம்மீன்!
இடுபொருள் ஆயினும் படுபொருள் ஆயினும்
உற்றவர்க்கு உறுதி பெற்றவர்க்கு ஆம்! என" - சிலம்பு-125

என்னும் பாடலில் தனது நீதியிலிருந்து தகவியதற்காக சிறைச்சாலையைத் திறந்து விடுங்கள் எனவும், வரிகொடுக்க வேண்டிய மக்கள் இருந்தால் அவர்களை விடுதலை செய்யவும், பிறருடைய பொருள்களாயினும் யானையின் புறக்கழுத்தில் அழகிய முரசினை இருத்தி அரசு நீதியாக அறிவித்த வெற்றியினையுடைய வேந்தன், தான் அரச முறைமையை தவறிய நிலைமையினைக் கேள் என்று உரைக்கின்றார்.

தான் அறியாது நீதி வழங்கினாலும் அதற்கான தண்டனை தனக்குக் கிடைக்க வேண்டும் என்றெண்ணிய மன்னனின் மனிதநேயம் எனும் சமூகநீதி இதில் புலப்படுகின்றது.

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**

"ஏரிநீர் நிறைந்த போதங் கிருந்தன பட்சி யெல்லாம்
மாநீர் மறுத்த போதப் பறவையங் கிருப்பதுண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமு முறந்த போதே
யாருமே நிலையில் லாம லவரவ ரேகு வாரே" – விவேக சிந்தாமணி -49

என்னும் பாடலின் வாயிலாக, குளத்தில் நீர் நிறைந்திருக்கின்ற காலத்தில் பறவைகள் எல்லாம் வந்து அங்கே தங்கியிருக்கும். குளத்தில் நீர் வற்றிவிட்டால் பறவைகள் எல்லாம் அங்கிருந்து பறந்து சென்றுவிடும். அதுபோல நாட்டைக் காவல் செய்யும் மன்னன் தன் நாட்டில் உள்ள குடிகளிடம் அன்புடையவனாக நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறல்லாமல் அவன் கொடுங்கோலனாக நடந்து கொண்டால் மக்கள் அவனுடைய நாட்டை விட்டு நீங்கி அன்புடைய மன்னன் ஆட்சி செய்யும் நாட்டைச் சென்றடைவார்கள். ஆகவே, நாட்டை ஆள்கின்ற மன்னன் நற்குணம் உடையவராகத் திகழ்தல் வேண்டும் என்னும் கருத்தினை விவேகசிந்தாமணி எடுத்துரைக்கிறது.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

என்னும் குறள் வழி தன் நாட்டில் நிகழும் குற்றங்களை நாள்தோறும் ஆராய்ந்து நீதி செலுத்தாத மன்னவனின் நாடு, நாள்தோறும் கெட்டழியும் என்று நீதியற்ற தன்மையை வள்ளவர் தெளிவுப்படுத்தியுள்ளதை அறியலாம்.

**முடிவுரை**

நீதி செய்பவர்கள் தூய்மையான மனநிலையினை உடையவர்களாய் இருத்தல் வேண்டும். மேன்மையானவர்களால் கூறப்பட்டுள்ள சமூகநீதி என்பது மேன்மையான நிலையினை அடையச் செய்வதாக இருத்தல் வேண்டும். அவை நீதியின் பயன்களாக பிற்கால நீதி இலக்கியங்களில் கூறுகின்றதை தெளியலாம்.

நற்குணம் இல்லாதவர்கள் எவ்வகையிலும் அறம் உரைக்கத் தகுதியற்றவர்களாவர். வாழ்க்கையில் நல்ல இலக்கற்றவன், அறிவில்லாதவன் பேராசை கொண்டவன். தீய செயல்களில் விருப்பம் கொண்டு செயல்படுபவன் ஆகியோர் நீதி கூற தகுதியற்றவர்களாக நீதி இலக்கியங்கள் தெளிவுப்படுத்தியுள்ளன.

நற்செயல்களால் நன்மையும் விளையும் தீமையும் விளையும். ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்கள் நரகம் செல்வதிலிருந்து தப்பவே முடியாது என்று நீதி இலக்கியங்கள் கூறுகின்றன.

பிறர் செய்யும் நல்லறங்களைக் கேட்பதன் வாயிலாக மனத்தில் நற்குணம் பெருகி மனமானது நற்செயல்கள் விளையும் இடமாக மாற்றம் பெறும். முதுமை காலத்தில் தான் நீதி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் தவறானதாகும். மனித வாழ்க்கை நிலை இல்லாதது என்பதனால் வாழ்கின்ற காலத்திலேயே நீதி செயல்களை செய்து சிறப்பாக வாழ்வோம்.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றின் வழி தமிழ்ப்புலவர்கள் சமூகநீதியாளர்களே

**சி. லலிதா**
கௌரவ விரிவுரையாளர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***முன்னுரை***

இலக்கியம் என்பது மனிதவாழ்க்கையின் வெளிப்பாடு என்பதோடு ஓர் பனுவலானது வெவ்வேறு உணர்ச்சிகளை எழுப்ப வல்லதாக அமைகிறது. மனித இனத்தின் அனுபவங்கள் மற்றும் சமூகத்தில் வாழும் மனிதர்களின் பண்புநலன்களை கலை நயத்தோடு இலக்கியம்எடுத்தியம்புகிறது. ஆகவே மனிதன் இல்லையெனில் இலக்கியம் இல்லை எனலாம்.சமூக நீதி, மனித உரிமை என்ற சொற்கள் 20-ம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதார விவாதங்களில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, இன்றும் அதன் தேவை தொடர்கிறது.மனித வாழ்க்கை எவ்வாறு படிப்படியாக முன்னேறியும், காலத்தின் தேவைக்கேற்ப மாற்றம் பெற்றும் வளர்கின்றதோ அதனைப்போன்று சமூகநீதி கொள்கைகளும் கோட்பாடுகளும் வளர்கின்றன எனலாம்.இந்நிலையானது மனித இனம் அனைத்திற்கும் பொதுவானது.தமிழர்கள் நீதிநெறியைப் போற்றி வாழ்ந்தனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. புலவர்கள் சமூக நீதி பற்றியசிந்தனையினை வளர்த்தனர் என்பதை பழந்தமிழ் இலக்கியமான புறநானூற்றில் இடம்பெற்றுள்ள தன்மைகளை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**சமூக நீதி**

சமூக நீதி என்ற கருத்தாக்கமானது சமூகத்தையும் தனிமனிதனையும் முறையாக சமமான உறவை இணைக்கக்கூடிய, ஏறக்குறைய நெருக்கமான பொருளைத் தரக்கூடியவை. தனிநபர்களின் சமூக செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்து, பாகுபாடற்ற நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்துவதாகும். தற்காலத்தில் உலகளாவிய பல சமூக அமைப்புகள் சமூகப் பெயர்ச்சிக்கான தடைகளை உடைத்து, சமூகப் பாதுகாப்பே உண்டாக்கி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கலைக்கிறது. சமூக நீதி மூலம் ஒரு சமூகத்தில் உள்ள அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களின் உரிமைகளையும்

கடமைகளையும் உறுதிசெய்து, சமுதாயத்தின் ஆதாயங்களையும் சுமைகளையும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. வரி, சமூகக் காப்பீடு, பொது உடல்நலவியல், பொதுக்கல்வி, பொதுப்பணி, தொழிலாளர் சட்டம், சந்தை ஒழுங்காணையம் போன்ற நிறுவனங்களில் வளங்களையும், வாய்ப்புகளையும் பகிர்ந்துகொள்ள வழிவகுப்பது.

நீதி என்ற சொல்லானது "சங்கப் புலவர்கள் புறம் பொருளின் ஒரு பகுதியாக அறத்தின் சிறப்பினை எடுத்துரைத்தார். 'நீதி' என்றும் அறத்தைக் கூறலாம் என்றால் நீதி, நீதிநூல்கள் என்று குறிப்பிடும் வழக்கம் தேவார காலத்தில் தோன்றியதாகும்" என க.த.திருநாவுக்கரசு குறிப்பிட்டுள்ளார். எனவே நீதி என்னும் சொல்லாட்சி பக்தி இலக்கியகாலமான 7-10 நூற்றாண்டுகளில் வழங்கப்பட்டவையாகும். சங்க இலக்கியத்தில் நீதியானது அறம், அறநூல்கள், அறக்கடவுள் என்ற தன்மையில் கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**சங்ககாலத்தில் நீதி**

சங்ககாலத்தில் நீதி என்பது அறம், ஒழுக்கம், கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை போன்ற பல சொற்களில் வழங்கப்படுகிறது. நீதி என்ற சொல்லுக்கு நியாயம் என்ற பொருள் வழக்கில் உள்ளது. நியாயம் என்ற சொல்லும் நேர்மை, வாய்மை, நன்னெறி, கட்டுப்பாடு என்பன பொருளாகும். வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகளை அறமென நீதி கருதப்படுகிறது. தொல்காப்பியர் அரசர்குரிய சின்னங்களாக குறிப்பிடுகையில்

"படையும் கொடையும் குடையும்
முரசும்....
தெரிவு கொள் செங்கோல்
அரசர்க்கு உரிய"[2]
(தொல்.பொ.மரபு.நூ.616)

என்ற நூற்பாவில் கோலானது நீதியை குறியீடாக உணர்த்துவதாகும். இதனை 'முறை' என்ற சொல்லால் வள்ளுவர்

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"
(குறள்.388)

"தொடக்கால மக்களிடத்தில் இன்று நாம் காணும் அறவுணர்வுகள் இல்லையாயினும் கூடி வாழும் தன்மை, இரக்கம், சார்புநிலை முதலிய அறக்கருத்துகள் காணப்பட்டன"[4] என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுகின்றது. மேலும் "கோலானது ஆட்சிக்குறி என்பதால் அரசனுடைய ஆட்சி நேர்மையானதாயிருக்க வேண்டுமென்பதைக் குறிப்பதற்கு அது நேரானதாக் செய்யப்பட்டிருக்கும். அதனால் அதற்கு செங்கோல் என்று பெயர். செம்மை நேர்மை. கொடுமையான ஆட்சி கொடுங்கோல் என்றும் குறிக்கப்படும். கொடுமை – வளைவு. ஆட்சியின் நேர்மையாவது அறநெறி வழி நேரே செல்லுதல்"[5] என்று செங்கோல் குறித்து ஞா.தேவநேயப்பாவணர் விளக்கம் தந்துள்ளார்.

"அறந்துஞ்சு செங்கோலையே..."
(புறம்.20)

''அறம்புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் ஈண்டு….'' (புறம்.35. 14-16)

என்னும் பாடல்களில் அரசனுடைய செங்கோலைக் குறிப்பிடுகின்றபொழுது நீதி பிறழாத செங்கோல் என்று சிறப்பித்து பாடுவதன்வழி புலவர்கள் நீதி தவறாத ஆட்சி நடத்தவேண்டிய தேவையினை எடுத்துக்காட்டியுள்ளமை அறியமுடிகிறது.

''வாழ்க்கையில் உயர்ந்தவை எனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்திலும் எவ்விடத்திலும் இடையறாது மேற்கொள்வதை ஒழுக்கம் என்பர். 'ஒழுகு' எனும் எனும் இச்சொல்லுக்கு 'நட' என்னும் பொருளும் உண்டு. ஒழுக்கம் என்பது 'நடத்தை' எனவும் பொருள்படும். நமது மரபுப்படி நடத்தை என்ப துநன்னடத்தையாகிய ஒழுக்கம் என்ற பொருளை 'நீதி' என்னும் சொல் உணர்த்துகிறது'' என்று க.த.திருநாவுக்கரசு தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பழங்கால மக்கள் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களுக்கிடையில் நீதி தவறாமல் செயல்படுவதற்கு பல்வேறு நெறிகளைப் பின்பற்றியிருந்தனர். அவ்வாறு எவ்வகையிலும் பிறருக்கு தீங்கு பயவாத நல்ல நெறியிலேயே செயல்பட வேண்டும் என்பதை கடமை உணர்வாக கொண்டிருந்ததை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**தமிழ்ப்புலவர்கள் சமூக நீதியை வலியுறுத்தல்**

பண்டைத் தமிழ் புலவர்கள் பெரும்பாலும் மன்னர்களின் ஆதரவால் வாழ்ந்தவர்கள். பெருநிலக்கிழார்களாகிய வள்ளல்களைப் பாடி, அவர்கள் வழங்கிய பொருள்களைக் கொண்டு வறுமை தீர்ந்து வாழ்ந்தார்கள். இருப்பினும் தங்களுக்கு உண்மை என்று நினைப்பதை உரைப்பதற்கும் அவர்கள் அஞ்சியதில்லை. தன்மானத்துடன் தங்கள் வாழ்வை நீதிநெறியோடு வாழ்ந்தனர்.

ஆவுர்மூலங்கிழார் என்னும் புலவர் மக்கள் முறைகேட்டு ஆட்சி செய்தற்குரிய மன்னன் காண்பதற்கு எளிமையானவனாகவும், இன்சொல்லுடனும் இருத்தல் வேண்டும் என்றும் தன்னை நாடி வருவோரிடம் செய்ய இயல்வதை முடியும் என்றும் இயலாதவற்றை முடியாது என்றும் கூறுவது நட்பை வளர்க்கும் தன்மையாகும். ஆனால் அம்மன்னனது புகழைக் குறைத்துவிடும் என்றும் நீதியை எடுத்துரைப்பதில்

''ஒல்லுவ தெல்லாம் என்றாலும் யாவர்க்கும் …..
ஆள்வினை மருங்கின் கேண்மை பாலே'' (புறம்.196. 4-6)

என்று பாடியுள்ளார். இதன்மூலம் அன்றைய காலத்தில் மன்னன் நீதிநிலை தவறாமல் நின்று ஆட்சிபுரிதலே அறமாகப் போற்றப்பட்டு புகழப்பட்டதென்பதை அறியமுடிகிறது.

சிறப்பில்லாத மன்னரைப் பாடுதல் புலவருக்கு இயல்பன்று என்ற நெறியுடன் உறையூர் ஏணிச்சேரி முடமோசியர் எனும் புலவர் ஆய் ஆண்டிரனிடம் நீதிக்கருத்துகளை கூறுமிடத்து,

''சுவைக்கு இனிது ஆகிய
குய்யுடை அடிசில்

பிறர்க்கு ஈவு இன்றித் தம் வயிறு
அருத்தி ……'' (புறம்.127.7-10)

என குறிப்பிட்டுள்ளார். அதாவது செல்வத்தினால் வரும் பயனை ஈதலாகிய அறத்தினைச் செய்து, பகுத்துண்டு பலருடன் வாழ்வதே நீதி என்றும், அவ்வாறு வாழாதவர் தன்னுடைய பெருஞ்செல்வத்தை இழந்துவிடுவர் என்றும் சமூகநீதியை வலியுறுத்தி பாடியுள்ளதை அறியலாம்.

குடபுலவியனார் பாண்டியன் தலையாலங்கானத்துத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அரசநீதி பற்றி

"நீர்இன்று அமையா
யாக்கை எல்லாம்
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே'' …….
(புறம்.18.13-16

என்ற படலில் சுட்டியுள்ளார். பாண்டிய நாடு நீர்வளம் குறைந்த நாடு. நாட்டில் நீர்நிலைகளைப் பெருக்குதல் மன்னர் கடமையாகும். நீரின்றி உலகம் அமையாது. மக்களது யாக்கை உணவினால் ஆனது. அந்த யாக்கைக்கு உண்டி கொடுப்பவர் உயிர் கொடுத்தவர் ஆவார். அந்த உணவெனப்படுவது நிலத்தோடு நீராகும். அறம் முதலிய உறுதிப்பொருள்களைப் பெறுவதற்கு நாட்டில் நீர்நிலைகளைப் பெருக்குதல் இன்றியமையாததாகும் என்று குடபுலவியனார் மன்னர்க்கு அறிவுறுத்தியுள்ளார்.

"புலவர்கள் வீரநிலைக் காலமாகிய சங்க காலத்தில் அரர்களை மகிழ்விப்பதோடு அவர்தம் புகழ் பரப்பும் வாயிலாகவும் பணிபுரிந்தனர்''[7] என்று வே.முத்துலட்சுமி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். சோழன் குளமுற்றுத்துஞ்சிய கிள்ளிவளவன் மலைமான மக்களைப் பகைமை காரணமாக யானைக்காலில் இட்டுக்கொல்ல முற்பட்டபோது கோவூர்கிழார் புறாவுக்காக தன் தசையை கொடுத்து நீதி வழங்கிய சிபி தோன்றிய குடியில் பிறந்தவனான மரபின் மாட்சியையும் மலைமானின் பகுத்துண்டு வாழும் தண்ணருளையும் எடுத்துரைக்கிறார். இதனை

"தண்பகை கடிதல் அன்றியும்
சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் வல்லன்
மாதே'' (புறம்.46)

என்ற பாடல் உணர்த்துகின்றது. சண்டையைக் காட்டிலும் சமாதானமே நாட்டுக்கு நன்மை தரும் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வளிக்கும் என்ற கருத்தினை வலியுறுத்திள்ளதைக் காணலாம். எனவே நல்ல சமுதாயம் வாழ நீதிநெறிகளை எடுத்துரைத்து மன்னரையும் மக்களையும் நெறிப்படுத்திய சமூக நீதியாளர்களாக புலவர்கள் திகழ்ந்துள்ளனர்.

போரால் பொதுமக்களின் உயிர்க்கு எவ்வித தீங்கும் நேராதவகையில் போரறத்தினை கையாள வேண்டுமென்பதை

"ஆவும் ஆனியற் பார்ப்பன
மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும்
பேணித்…..'' (புறம்.12)

என்று நெட்டிமையார் வலியுறுத்துகிறார். அதாவது பசு, அந்தணர், பெண்டிர், பிணியாளர், மக்களைப் பெறாதோர் ஆகியோரைப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுமாறு அறிவித்தல் போருக்குரிய அறமாக வலியுறுத்தப்பட்டுள்ளதன் வழி பண்டைத் தமிழ் புலவர்கள்

நீதியை நிலைநாட்ட வேண்டியதோடு, வாழ்ந்தும் காட்டியவர்கள் என்பதை அறியலாம்.

பாண்டியன் அறிவுடைய நம்பி குடிமக்களிடமிருந்து வரிவாங்கும் முறையில் தவறிழைத்தபோது பிசிராந்தையார் அம்மன்னனுக்கு வரி வாங்கும் நீதியை அறிவுறுத்தி நெறிப்படுத்தும் முகமாக

“அறிவுடை வேந்த
னெறியந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது
நந்தும்” (புறம். 184. 5-6)

என்னும் பாடலின்வழி சமூகநீதியை வலியுறுத்தியுள்ளார்.

வறுமையின் கொடுமையை புலப்படுத்திய பெருஞ்சித்திரனார் குமணன், வெளிமான் போன்ற வள்ளல்களிடம் பெற்ற பெருவளத்தினை எல்லோருடனும் பகுத்துண்டு வாழும் பண்பினை உடையவர் என்பதை தன் மனைவியிடம்,

“இன்னோர்க் கென்னா
தென்னொருஞ் சூழாது…..
எல்லோர்க்குங் கொடுமதி
மனெகிழவோயே” (புறம்.163. 5-7)

என அறிவுறுத்திப் பாடியுள்ளார். அதாவது இன்னார் என்று கருதாது தன்னைக் கேட்க வேண்டும் என்று கருதாமல் பிற்காலத்திற்குச் சேர்த்து வைக்காமல் எல்லோருக்கும் கொடுக்கும் பண்பினை உடைய பெருஞ்சித்திரனார் சமூகநீதி கொள்கைகளை வலியுறுத்தியதோடு வாழ்ந்தும் காட்டியுள்ளதை அறியமுடிகிறது.

“அறவோர் என்போர் அறத்தின்வழி நடப்பவர்கள், அறத்தைப்பற்றி சிந்திப்பவர்கள், அறத்தின்வழி இயங்கச் சமுதாயத்தை நல்லாற்றுப்படுத்துபவர்கள், மனித நல மேம்பாட்டையை முதன்மைப்படுத்திச் செயல்படுபவர்கள்”[8] என்கிறார் கு.மோகனராசு குறிபிட்டுள்ளவற்றிற்கு வலு சேர்ப்பவையாக பெருஞ்சித்திரனார் வாழ்க்கை அமைகிறது.

மோசிகீரனார் அரசனிடம் நீதியை நிலைநாட்டும் பொருட்டு

“நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை
யுலகம்” (புறம்.186.1-2)

என்ற பாடலில் புலப்படுத்தியுள்ளார். மக்களுக்குகாகத்தான் உயிர் என்பதை உணர்ந்து செயல்படுதல் மன்னனின் கடமை என்பதை எடுத்துரைத்தவர். புலவர் பெருஞ்செல்வமுடைய மன்னரை நாடாமல் வள்ளல்களையே நாடுவர். ஏனெனில் அங்கு பெரும் பொருள் சிறிதாயினும் தம் வறுமையில் தகுதியறிந்து அளித்தவர்களை புகழ்ந்து பாடுவது புலவர்களது இயல்பு என கொண்கானங் கிழானுக்கு எடுத்துரைத்துள்ளார். இதன்மூலம் அன்றைய காலத்தில் நீதிநிலை தவறாமல் நின்று ஆட்சி புரிதலே அறமாகப் போற்றப்பட்டு புகழப்பட்டதினை அறியமுடிகிறது.

“உலகியல் விளக்கம், அரசியல் அறிவு, இறையியல் சிறப்பு, அறிவியல் என பலவற்றை உருவாக்கி வளர்த்த சிந்தனையாளர்களையும் காண்கிறோம். தொழற்படுத்தி, கலைவன்மை, இவற்றை உருவாக்கி அவர்கள் தமிழகத்தைச் செல்வமும், இன்பமும் கொழிக்கும் நாடாக வளர்க்கத் தூண்டுகோலாக

விளங்கினார்கள்''[9] எனப் புலவர்கள் பற்றி இராம.பெரியகருப்பன் குறிப்பிட்டுள்ளதை போன்று வெள்ளைக்குடி நாகனார் எனும் புலமை வாய்ந்த புலவர் சோழன் குளமுற்றுத்துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிப் பழஞ்செய்கடன் வீடு கொண்டவர். அம்மன்னனுக்கு அரசியல் நடத்தும் நீதிநெறிகளைப் பற்றி எடுத்துரைக்கையில் செங்கோல் தவறாமல் நீதி வேண்டியோர்க்கு மன்னர் நீதி வழங்க வேண்டும். வெயிலினின்றும் அருள்செய்து பாதுகாத்தல் வேண்டும். நாட்டில் விளைவு குன்றினாலும், மழை பெய்தாலும் இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் மன்னனைக் காரணமாக்குவர். எனவே மன்னன் உழவர் குடிகளை பாதுகாக்க வேண்டும். பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பது படைபலம். அப்படைகளுக்கு உணவளித்துக் காப்பவர் உழவர். ஆகவே அவ்வுணவினை விளைவித்துக் கொடுக்கும் உழவரின் குடியைப் பாதுகாத்தல் வேண்டும் என்பதை

''பகடுபுறந் தருநர் பாரமோம்பிக்
குடியுறந் தருகுவை யாயின்''
(புறம். 35. 32-34)

என்று சமூகநீதியை பற்றி செவியறிவுறுத்தியுள்ளார்.

அக்காலத்தில் உழவு தொழிலே முதன்மையான தொழிலாக விளங்கியது. உழவு உயர்ந்து விளங்கும் இடத்தில் செல்வவளம் செழிக்கும் என்ற உண்மையை உணர்ந்த தமிழ்ப்புலவர்கள் மக்களுக்கு உணவு விளைவிக்கும் உழவர்கள் உயிர் கொடுப்பவர்களாக கருதப்பெற்றனர். இதன்மூலம் மன்னர்குரிய நீதியானது நாடு காப்பது முறைசெய்தல், குடிமக்களைக் காப்பது போன்ற நெறிகளை வலியுறுத்திப் பாடியுள்ளதை அறியலாம்.

அனைவரையும் ஒன்றாகக் கருதி விருப்பு வெறுப்பின்றி சமநீதி வழங்கும் அறநெறியைப் பின்பற்றுவதே ஆட்சியின் அடிப்படை. இந்த அடிப்படையை மறந்துவிட்டு அதிகாரச் செருக்கால் படை பலத்தால் மக்களை அடக்கி ஆண்டுவிடலாம் என்று நினைப்பவர்கள் அரசின் அடிப்படையை அறியாதவர்கள் என்பதை

''கடுஞ்சினத்த கொல்களிறும் ……
அறநெறிமுதற்றே அரசின்
கொற்றம்'' (புறம்.55)

என்னும் பாடல் குறிப்பிடுகிறது. இதில் அராட்சியின் வெற்றி சிறந்த அறநெறியையே அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது என்தை உணர்த்துகிறது.

ஒரு சமுதாயம் சிறப்பான முறையில் இயங்க வேண்டுமானால் அச்சமுதாயத்தில் வாழ்வோர் அறநெறிகளைக் கடைபிடித்து வாழவேண்டும். சங்ககாலச் சமுதாயம் நல்லமுறையில் வாழ, மன்னரையும் மக்களையும் நெறிப்படுத்தும் வகையில் புலவர்கள் பலர் சமூக நீதியை வலியுறுத்திப் பாடியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

நீதி என்னும் சொல் தமிழில் ஒழுக்கம் நியாயம், முறைமை, அறநூல் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஆதிகால மக்களுடைய வாழ்க்கை முறையில் சமூக நீதியானது துல்லியமாக இருந்தது என தீர்க்கமான முடிவாக சொல்லுதற்கில்லையென்றாலும்

அதற்கான கூறுகள் இடம்பெற்றுள்ளன என கூறமுடிகிறது. எனவே சமத்துவம், சகோதரத்துவம், சமதா்மம், மானுடப்பற்று, மனிதாபிமானம் முதலியன பற்றி இன்று இருபதாம் நூற்றாண்டில் பெருமளவில் பேசப்பட்டாலும் இரண்டாம் நூற்றாண்டு காலக்கட்டத்திலே சமூக நீதிக்கான செயல்பாட்டுக் கூறுகள் காணக்கிடைக்கின்றன. அறமானது ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவிற்குட்பட்டதாக இல்லாவிடினும் மனித குலத்திற்குரிய சிறப்பு குணங்களாக விளங்கியிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அவை இயற்கை விருப்பத்தின் தூண்டல்களாக, சமுதாயக் கட்டுப்பாட்டின் விளைவுகளாக அமைந்துள்ளன எனலாம். இவ்வாறு தமிழ்புலவா் பெருமக்கள் மன்னா்க்கு அரசியற் சூழ்ச்சிக்குரிய அமைச்சராகவும், நிலையாமையினை எடுத்துரைக்கும் அறவோர்களாகவும், நன்று, தீது உணா்த்தி நல்லாற்றின் நிறுத்தி அறிவுரை கூறும் ஆசிரியராகவும், உடன்தோன்றினாரிடையே மாறுபாடு நிகழும்போது நடுநின்று அக்குல முதியோராகவும் விளங்கியுள்ளனா். இவை அனைத்திற்கும் மேலாக நீதி தவறிய நிலையில் ஆட்சி செய்யும் மன்னனிடம் அஞ்சாமல் சமுதாயத்தை மேம்படுத்தும் சமூகநீதி கொள்கையுடன் தன் கருத்துக்களை எடுத்துரைத்த தமிழ்ப்புலவா்கள் சமூகநீதி கொள்கையாளா்களே எனலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. அறவாணன்,க.ப, திருக்குறள் (தெளிவுரை), குறள்.388, 2முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, சென்னை – 600 029. ப.ஆ 2013
2. இளம்பூரணா், (உரை), தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, மு.ப.1969
3. திருநாவுக்கரசு, க.த, திருக்குறள் நீதி இலக்கியம் ப.3, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
4. தேவநேயப்பாவணா், ஞா, பழந்தமிழாட்சி,ப.65, திருநெல்வேலி சைவித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ென்னை. மு.ப. 1961
5. பாலுசாமி.ந. (முதன்மை பதிப்பாசிரியா்) வாழ்வியற் களஞ்சியம் தொகுதி- இரண்டு, ப.49, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூா், 1986.
6. பாலசுப்பிரமணியன்,கு.வே,(உரை), புறநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41 – பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600098. ஐந்தாம் பதிப்பு. அக்டோபா், 2014
7. பெரியகருப்பன், இராம, பரிசில் வாழ்க்கை.ப.10, சோலை நூலகம், மதுரை. மூ.ப – 1977
8. முத்துலட்சுமி, வே, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள், ப.220, கவிக்குயில் பிரிண்டா்ஸ், சென்னை – 5.
9. மோகனராசு,கு, தொல்காப்பியா் ஓா் அறவாணா்,ப.15, ஸ்டாா் பிரசுரம், சென்னை – 5. முதல் பதிப்பு 1987.

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சித்திரக்கவியில் சமூக நீதி கோட்பாடுகள்

**கு. திலகவதி**
*ஆங்கில பட்டதாரி ஆசிரியர், அ.பெ.மெ.நி.பள்ளி,கோவை*
*முனைவர் பட்ட ஆய்வாளர், கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர், தமிழ்நாடு*

***முன்னுரை***

மனிதன் ஒரு சமூக விலங்கு என்கிறார் ரூசோ.சமூகத்தில் ஒருவரை ஒருவர் தவிர்த்து வாழ இயலாது.சமுதாயம் என்பது பலரும் கூடி வாழும் ஓர் அமைப்பாகும். மக்களால் மக்களுக்காக உருவாக்கப் பட்டது. பல்வேறு வண்ணங்களால் ஆன மலர்கள் ஒன்றிணைந்து மாலையாவது போல மதத்தால், இனத்தால், மொழியால் வேறுபட்டவர்கள் ஒன்றிணைந்து வேற்றுமைகளுக்குள் ஒற்றுமை கண்டு வாழ்வதே சமுதாயம்.‘‘தனிமனித நிலையில் இருந்து படிப்படியாக மன அளவில் வளர்ச்சி பெற்று ஆண் பெண் இணைந்து சந்ததிகளை உருவாக்கிப் பின்னாளில் கூட்டுக் குடும்பமாக மாற்றமடைந்து மிகப்பெரிய சமூக அமைப்பிற்கு வித்திட்டது எனலாம்.சமூகம் என்பது செயல்பாடுள்ள ஒரு குழுவாகும். பல மனிதர்களைக் கொண்டு சமூகம் உருவாக்கப் பட்டிருப்பினும் சமூக அமைப்பில் தனிமனித நலன் சமூக நலன்களுக்கு உட்பட்டு அமைகின்றன.தமிழ் சமூகத்தில் மன்னனின் தகுதி அவன் மக்களைக் காப்பதில் இருப்பதாகவேக் குறிப்பிடுகிறது. சொல்லணியியலின் மிக முக்கியக் கூறாகவும்,நாற்கவிகளுள் சிறப்பு வாய்ந்த மிறைகவி என்னும் சித்திரக்கவி பெரும்பாலும் இறைவனைப் போற்றிப் பாடினாலும் அதில் வாழ்வியல் கருத்துகளையும்,சமூக நீதி கோட்பாடுகளையும் கூறவியலும் என்பதற்கு உதாரணமாக அமைந்த மாணிக்கமாலை பந்தம் மற்றும் அதில் கூறப்பட்டுள்ள சமுதாய சிந்தனைகளையும் உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**சித்திரக்கவி:**

குவலயானந்தத்தின் படி சித்திரவியல் என்பது

‘‘நால்வகைப்
புலமையும்,நான்குவிதக்
கவிதையும்,எட்டுவகைக்
கணப்பொருத்தமும்,சங்கை செயும்
விகற்பமும்,பத்துவகைக்
குற்றமும்,அகடகடனா
சாமர்த்தியமும், எழுவகை மதமும்,
முப்பத்திரண்டு தந்திரவுத்தியும்
பாடம் செய்யும் கருத்தும்,
அலங்காரத்தின் பேதாபேதம்
உணர்த்தலும் இவையும் அன்றிப்
பிறவும் சில விசித்திரக் கருத்து
வருதலும் சித்திரவியல்.’’

நாற்கவிகளுள் சிறப்பிடம் பெறும் சித்திரக்கவி எழுத்து சித்திரக்கவி,சொற்சித்திரக்கவி,வடிவ சித்திரக்கவி என்ற மூன்று வடிவத்திலும் அமையும்.எழுத்து சித்திரக்கவியும்,சொற் சித்திரக்கவியும் செவிக்கு இன்பம் சேர்க்க ,வடிவ சித்திரக்கவியோ கண்களுக்கும் விருந்தாகிறது.

''ஆசு மதுரஞ் சித்திரம் வித்தார
மாகு நாற்கவி யறையுங் காலே''
(முத்துவீரியம்,55)

**பந்தங்கள் வகை சித்திரக்கவி:**

பந்தங்கள் என்றால் கட்டுதல் என்று பொருள். பந்தங்கள் வகை கவிகள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட வகை ஓவியத்திற்குள் எழுதப்படும் கவிகளாகவே உள்ளன. இதில் இறைவனைப் போற்றிப் பாடும் வகையில் அமைக்கப்பெற்ற கவிகள் இறை சம்பந்தப்பட்ட பொருள்களின் வடிவங்களிலேயே அமைந்திருப்பது சிறப்பு. அன்ன பந்தம், நாகபந்தம், பதும பந்தம்,முரச பந்தம், இரதபந்தம், கடகபந்தம்,சிவலிங்க பந்தம்,சங்கு பந்தம், சொக்கட்டான் பந்தம்,திருக்கை பந்தம்,திருவடி பந்தம்,மயில் பந்தம், மலைபந்தம், மீன் பந்தம், விருச்சிகபந்தம், விளக்கு பந்தம், என்று பந்தங்களின் வகைகள் விரிந்து கொண்டே செல்கின்றன.சில பந்த வகைகளுக்குள் வாழ்வியல் அறநெறிகளையும்,சமூகக் கோட்பாடுகளும் கூட கூறப்பட்டிருக்கின்றனர்.

மாணிக்க மாலை பந்தம்

**படிக்கும் முறை:**

மாணிக்க மாலையினுள் செய்யுளைப் புகுத்தி எழுதுவது. மேலே ஒன்று என்று ஆரம்பிக்கும் எழுத்தில் தொடங்கி படிக்க வேண்டும். முகப்பின் நடுக்கட்டத்தில் இரண்டு எழுத்தும் மற்றவை தொடர்ந்து படிக்கவும் மற்ற 13 சந்திப்புகளின் நடுவில் ஓர் எழுத்தானது மும்மூன்றாக கொள்ள வேண்டும். அதாவது ஒரு எழுத்து மூன்று இடத்தில் வரும். நடுவில் இருக்கும் எழுத்து இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் மேலிருந்து கீழாகவும் படிக்கும்படி அமையும்.

உதாரணப்பாடல்

"காவார் வானம் காற்றுடன் மன்னன் கொடைதரு பூமியை மிகமிக வென்று
மேதகுதனதருளினால் காசெழிசெக வேலைஓ தஓங்கிட தடமிட வெய்யோன்
நீதி யதிபதி அரசனே வென்றான்
தன்பழி கூசித் தனதவை தடத்திடை
நீர்சேர் வார்புனல் நல்லோங்க சுகமிக
இறைவியு மிறைவன் வழிவள மோகத்
தில்நூல் போல்தழைத் தோத

**நாடு நாடு நாழி வளர்ந்தே!**

வானமும் காற்றும் நம்மை காப்பது போல் மன்னன் அறம் சூழ பூமியை வென்று தன் நல்ல அரசாட்சியால் பூமியை செழித்த சோலை ஆக்கி வேலைவாய்ப்பை தரும் கல்வியை ஓத ஓங்கி தடம் பதிப்பான். சூரியன் போல் நீதி வழங்கி வெல்வான் பலி பாவத்திற்கு பயந்து தனது அவையை நடத்திட நீர் வளம் சிறக்கும் சுகம் மிகவும் தாய் தந்தை வழியில் மக்கள் மோக வாழ்வில் அறநூல்கள் விரும்பி படித்து நாட்டில் வளர்ச்சியை நாடி நாழிகை போல் வளர்ந்து கொண்டே இருப்பர்.

மன்னன் செயலே மக்களுக்கு முதன்மையானதாக

அமைகிறது.மன்னன் அறம் சூழ ஆட்சி நடத்தினால் மக்கள் வாழ்க்கை வளம் பெருகும். அதனை வழிக்கொண்டே மக்கள் நடக்கின்றனர். இதனையே வள்ளுவரும் தன் குறள் வழி உணர்த்துகிறார். குறள் 520

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

நாள் தோறும் தன் கடமைகளை ஆராய்ந்து தன் செயல்களை நடுவுநிலைமை.·. நீதி தவறாது ஒரு அரசன் செய்ய வேண்டும். அவ்வாறு ஒரு அரசன் செய்வான் ஆயின் அந்நாட்டு மக்களும் அவர்கள் பணிகளை சரியாக செய்வர். அரசன் தனது நீதியில் இருந்து தனது கடமையில் தவறவில்லை என்றால், மக்களும் அவர்களது கடமையில் இருந்து தவறமாட்டார்கள். ஒரு அரசன் அவன் நாட்டிற்கு தன் செயல்களில் நேர்மையாக முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ''அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்'', ''அரசன் எப்படியோ அப்படியே குடிகள்'' ஆகிய பழமொழிகள் ''நாடோறும் நாடுக'' - ஒரு மன்னன் நாள்தோறும் மக்களை நாடி மக்களுக்கான செயல்களை செய்யவேண்டும். பிறர் சொல்லவேண்டும் என்றில்லாது தன்முனைப்புடன் செய்பவனே தலைவன் அவனே அரசனாவன். எல்லாவற்றையும் தனது பொறுப்பு என்று எடுத்து செயல்களைப் புரிபவன். அத்தகையவன் கீழ் பணிப்புரியும் அமைச்சர்களும் அத்தகைய தலைவனின் கீழ் இருக்கும் மக்களும் வினைசெய்வார்கள் நடுநிலை தவறமாட்டார்கள்.

**மன்னரின் விழுமியங்கள்**

சங்ககால மன்னர்கள், வள்ளல்கள் முதலானவர்களின் கொடைத்திறத்தினை நோக்கின் கொடைஎன்னும் விழுமியம் மன்னர்கள், வள்ளல்களின் வாழ்வில் நீக்க இயலாத பண்பாக அமைந்திருத்தலைக் காண்கின்றோம்.

**தலைநாள் விருப்பினன்**

ஒருநாட் செல்லலம் பலநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரோடு செல்லினும்
தலைநாட் போன்றே விருப்பினன்
மாதோ புறநானூறு (101:1-3)

என்று ஔவையார், அதியனைக் குறித்துப் பாடும்போது மன்னனின் விருந்தோம்பல் பண்பினைக் காண்கின்றோம்.இது போன்ற கருத்தினைக் காரிக்கிழாரும்,

இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னும்
முன்னே தந்தனன் என்னாது உன்னி
வைகலும் செலினும் பொய்யலன் ஆகி
யாம் வேண்டி யாங்குளம் வறுங்கல
நிறைப்போன் புறநானூறு(171:1-5)

என்று பிட்டங்கொற்றனைக் குறித்துப் பாடுவர்.

கைம்மாறு கருதாக் கொடை

உலகத்துச் செல்வர் பலரும் தம்பால் உள்ள செல்வத்தைப் பரிசிலர்க்கு வழங்குதல் இம்மையிற் புகழும் மறுமையிற் துறக்க இன்பம் குறித்தது ஆகும். இல்லோர்க்கு வேண்டுவன நல்கி அவர்களையும் தம்மால் உலகியலில் நுகர்வன எல்லாவற்றையும் நுகர்வித்தல் உடையோர்க்குக் கடனாகும் என்ற உயர் விழுமியத்தைக் கடைபிடிப்பவன் ஆய்அண்டிரன் என்றுரைப்பர் முடமோசியார்.

இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வாணிகன் ஆய்அலன்
புறநானூறு' (134:1-2)

என்னுமடிகள் இதனை வலியுறுத்தும்.

**முடிவுரை:**

"மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்னும் நீதிநெறி விளக்கப்படி மக்களை அடியொற்றியே மக்களின் வாழ்க்கை முறை அமையும் என்பதையும் மன்னன் அறநெறி வழுவாது நின்று தன் குடிகளைக் காக்க வேண்டும்.அவ்வாறு உருவாக்கப் படும் சமுதாயம் சிறந்த முறையில் கட்டமைக்கப் படும் என்பதை வலியுறுத்தும் இலக்கியங்கள் தமிழில் விரவிக் கிடக்கின்றன. இன்றைய ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பல சமுதாயக் கோட்பாடுகள் நம் இலக்கியங்க்களில் பொதிந்துக் கிடக்கின்றன. அவ்வாறு சிறப்புப் பெற்ற மனித வாழ்வியலின் விழுமியங்களையும், சமுதாய சிந்தனைகளையும் சித்திரக் கவியிலும் படைக்க இயலும் என்பதற்கான உதாரணத்துடன் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்:**


1. யாப்பு எழுத்தாணி சித்திரக்கவிகள், பாவலர். சோ.மோகன், 2022, ஜி.எம்.அமுதன் பதிப்பகம், தஞ்சாவூர்.
2. சித்திரக்கவிகள்: வே.இரா.மாதவன், 1983, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. சித்திரக் கவிக் களஞ்சியம், வ.ஜெயடேவன், 2007, சென்னை பழ்கலைக்கழகம்
4. சித்திரக்கவித் திரட்டு, ஈழமும் தமிழும் (6), ஞானம் பாலச்சந்திரன், 2016, ஞானம் வெளியீடு
5. மாறனலங்காரம், முத்துவீரியம், சுவாமிநாதம், குவலயானந்தம், தமிழ் இலக்கண நூல்கள், பதிப்பாசிரியர், ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007
6. தண்டியலங்காரம், உரை, டாக்டர் தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம். மதுரை.
7. புறநானூறு, புலியூர் கேசிகன், கொள்ரா பதிப்பகம், 2006
8. திருக்குறள் விளக்கம், முனைவர்.பா.வளன்அரசு, சூர்யா பதிப்பகம், திருநெல்வேலி
9. நாளும் ஒரு நல் வெண்பா, சோ.மோகன், அமுதன் பதிப்பகம், தஞ்சாவூர், 2022

*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VIII,* பதிப்பு *21,* ஜுலை-திசம்பர் *2023*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# பெரியபுராணத்தில் சமூகநீதி

## முனைவர் ஜெ.சந்திரிகா

தமிழ்த்துறைத்தலைவர், ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, அண்ணாநகர், சென்னை

***முன்னுரை***

இலக்கியம் சமூகத்தின் கண்ணாடி. அந்தந்த காலச் சமூகத்தை உள்ளவாறே எடுத்துக்காட்டும் படைப்பே இலக்கியம். சமூகத்தில் நிலவும் சாதி,சமய,இன, மொழி, பொருளாதார வேறுபாடுகளைத் தோலுரித்துக்காட்டுவது இலக்கியம். இவ்வேறுபாடுகள் இல்லாத சமூக நீதியையே தந்தை பெரியார் வலியுறுத்தினார். இலக்கியங்களில் சமூகஅவலங்களும் சமூகநீதிகளும் இழையோடியுள்ளன. சேக்கிழாரின் பெரியபுராணத்தில்சாதி, குலம், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருந்து இறைபக்தியால் நாயன்மார்கள் எனும் அடையாளத்தைப் பெற்றவர்களின் வரலாறு கூறப்படுகிறது. இவ்விடத்தில் சமயம் குறித்து தந்தை பெரியார், ”மனிதன் ஒழுக்கமாகவும் உண்மையாகவும் மற்ற மக்களிடத்தில் அன்பாகவும் வேற்றுமையில்லாமலும் உதவி செய்யும் எண்ணத்துடனும் எதையும் சிந்தித்துச் செயலாற்றும் வன்மையுடனும் இருந்தால் போதும். அதற்குரிய கொள்கைகள் கொண்ட எந்தச் சமயமானாலும் சரி, அது சமயமல்லாவிட்டாலும் சரி அது எனக்கு ஏற்புடையதே” என்று கூறியது எண்ணத்தக்கது. பெரியபுராணத்தைச் சேக்கிழார் வரலாற்று ஆதாரங்கள் கொண்டும் மூலநூல்களான திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதியை அடியொற்றி எழுதினார். பகுத்தறிவு நோக்கில் நூல் செய்திகள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாதெனினும் அதில் விரவியுள்ள சமூகநீதி குறித்த பதிவுகளை மட்டும் இக்கட்டுரை மையப்படுத்துகின்றது.

**சாதி, குலம் கடந்த சமூகநீதி**

பெரியபுராணம், பல்லவர் காலத் தமிழ்ச் சமூகத்தை அடையாளப்படுத்துகின்றது. அக்கால வணிகம், சமயநிலை, கலைவளர்ச்சி, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் காவியம். இக்காவியத்தில் கூறப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் 47 பேர் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், ஆதிச்சைவர் மரபினர். மீதமுள்ள 16 பேர் வெவ்வேறான மரபினராக உள்ளனர். இறைவனுக்கு முன்

அனைவரும் சமம் என்பதை அனைவரும் அறிவோம். இருப்பினும் சாதிப்பிரிவும் துவேஷமும் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் 16பேரும் இறைபக்தியால் தம்மை உயர்த்தியதுடன் தம் சமூகத்திற்கும் உயர்வைக் கொடுத்துள்ளனர். ஆயினும் அவர்கள் இறைபக்தி எனும் பெயரில் தங்களை வருத்திக்கொண்டு இந்த உயர்வை அடைந்ததை வரலாற்றிலிருந்து மறைக்கவோ மறுக்கவோ இயலாது.

பரதவர் இனத்தைச் சேர்ந்த அதிபத்தர், நாள்தோறும் தான் பிடிக்கும் முதல் மீனை இறைவனுக்கு என்று கடலிலே மீண்டும் விடுபவர். ஒரேயொரு மீன் கிடைத்தாலும் அதனையும் விட்டுவிட்டுப் பட்டினியால் வாடியுள்ளார். சிவபக்தியில் தளராத அவருக்கு, ஒருமுறை வலையில் முதல் மீன் பொன்மீனாகக் கிடைத்த போதும் தன் வறுமையைப் பொருட்படுத்தாமல் அதனையும் கடலிலே விட்டார். வறுமையிலும் நேர்மையாய்த் திகழ்ந்த அவருக்குச் சிவபெருமான் காட்சிகொடுத்து அருள் செய்தார். இடையர் குலத்தைச் சேர்ந்த ஆனாயநாயனார், நமச்சிவாய மந்திரத்தை ஏழு சுரங்கள் பொருந்த புல்லாங்குழலில் வாசித்தவர். இங்கு இசைக்கு இறைவன் அடிமையாகியதுடன் நாயனாருக்கும் அருள் செய்தார்.

வேடன் மரபில் உதித்த திண்ணனார், இறைவன் மீது மிகுந்த அன்பு கொண்டு பன்றி இறைச்சியை வாயில் சுவைத்துப் பார்த்து தாயினும் சாலப்பரிந்து இறைவனுக்குக் கொடுத்தார். ஆகம முறைப்படி பூசை செய்த பிராமணனுக்கும் அருள் செய்யாத இறைவன், முழு அன்புடன் தன் கண்ணையே இறைவனுக்கு வைத்த கண்ணப்பருக்குக் காட்சி கொடுத்தார். கடவுளை வணங்குகின்றவன் காட்டுமிராண்டி என்னும் பெரியாரின் கூற்றுக்குச் சான்றாக கண்ணப்பரைக் காணமுடிகின்றது. வேட்டையாடித் திரிந்தவருக்கு காட்டில் கண்ட சிவலிங்கத்தின் மீது அன்பு ஏற்பட என்ன காரணம் இருக்கமுடியும்? கல்வியறிவில்லாத கண்ணப்பர் வேதங்களைக் கற்றுப் பூசை செய்த அந்தணனை விட உயர்வுக்குச் சென்றதன் பின்னணிக்கு இறையருள் என மொழிவர் சமயவாதிகள். பொய்க்கதை என்பர் பகுத்தறிவுவாதிகள். அந்தணன் வேடன் எனும் இரண்டு குலத்திற்கும் இடையே இருந்த உயர்வுதாழ்வு பிரிவினையே இவ்விடத்தில் நோக்கத்தக்கது. பொய்க்கதையாக கருதினும் உயர்ந்த சாதி எனச் சுட்டப்படுபவனைக் காட்டிலும் வேடனுக்கு முக்கியத்துவம் கிடைத்தது என்ற சமூகநீதியே கவனத்திற்குரியது.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் இறைவனைப் போற்றி யாழிலே வாசித்துப் பாடுபவர். கோயிலுக்குள் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் இறைவன் ஆணையிட கோயிலுக்குள் அழைத்துச்

செல்லப்படுகிறார். பொற்பலகையில் அவரை அமரவைத்து பாடவைத்தனர். திருவாரூர்க்குச் சென்றபோது வடதிசை வாசல் இவருக்காகத் திறக்கப்பட்டு உள்ளே நுழைந்து பாடுகிறார். அந்தணரான சம்பந்தரிடம் நட்பு கொண்டதுடன் அவரது பாடல்களை யாழில் வாசித்தார். சம்பந்தருடன் சோதியில் இவரும் கலந்தார் எனும் பெரியபுராண அடிகளில் சமூகநீதியின் மாண்பை அறியலாம்.

அறந்திகழும் திருப்பதிகம் யாழி லேற்றி
ஆசில்திருப் பெருமணங்சேர்ந் தருள்பெற் றாரே. 2

நாயன்மார்களுள் ஒருவரான சாலியர் குலத்தில் தோன்றிய நேசநாயனார், சிவனடியார்களுக்குத் தனது கையால் கீள், கோவணம், ஆடை முதலியவற்றை நெய்து கொடுத்து இறையருள் பெற்றார்.

ஆயர் குலத்தில் தோன்றிய ஆனாய நாயனார், மாடுமேய்க்கும் தொழிலைச் செய்து வந்ததுடன் சிவனையும் வணங்கி வந்தவர். ஒருநாள் காட்டில் கண்ட கொன்றை மரத்தைச் சிவனாகவே எண்ணி புல்லாங்குழலை மெய்ம்மறந்து வாசித்தார். பறவைகள், விலங்குகள் , மரங்கள் அருவிகள் உள்ளிட்ட அத்தனை உயிர்களும் இசையில் மெய்ம்மறந்து நிற்க இறைவனும் மகிழ்ந்து அவருக்கு அருள் செய்தார்.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே 3

எனும் பாடலடிக்கு ஏற்ப, இறைவன் அன்புக்குக் கட்டுப்பட்டவன் என்பதைப் பல நாயன்மார்களின் வாழ்வியல் காட்டுகிறது.

**சாதிப்பிரிவினை- சமூகநீதியின்மை**

திருநாளைப்போவார் எனும் நந்தனார் சிவாலாயங்களில் உள்ள பேரிகைக்குத் தோலும் வாரும் வீணைக்கும் யாழுக்கும் நரம்பும் சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கும் குலத்தொழிலைச் செய்தவர். ஆயின் கோயிலினுள் சென்று இறைவனை வழிபட உரிமை இல்லை. திருப்புன்கூர் எனும் தலத்து இறைவனை எண்ணி அன்புருக தொழுது பாடுகையில் இறைவன் அருளால் நந்தி விலக இறைவன் நந்தனாருக்குக் காட்சி கொடுத்தார். தாழ்ந்த சாதி என முத்திரை குத்தப்பட்டு கோயிலினுள் நுழையஅனுமதி மறுக்கப்பட்டமை, சமூகசீர்கேட்டின் உச்சமாகும். கடவுள் சாதி மதவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர் எனில் நந்தனாரை உள்ளே அழைத்து காட்சி கொடுத்திருக்கலாம் அல்லவா? அடுத்து, நந்தனார் தில்லையில் நடனகோலத்திலுள்ள இறைவனைக் காணவேண்டும் என்று தினமும் நாளைப்போவேன் நாளைப்போவேன் என காலம் தாழ்த்துகிறார். இதற்கு காரணம், அவரது மனதில் தில்லைவாழ்அந்தணர்கள் வசிக்கும் தில்லைக்குள் சென்று இறைவனைக் காணஇயலாது என்ற

அச்சவுணர்வும் தனது சாதியின் மீது கொண்டிருந்த தாழ்வு மனப்பான்மையும் தன்மானமில்லாமையுமே ஆகும். ஒருநாள் துணிந்து தில்லைக்குச் சென்ற அவர், அங்கு வேதம் ஓதும் இடங்களையும் யாகசாலைகளையும் மடங்களையும் கண்டு அஞ்சுகிறார். மனம் நொந்து உறங்கிய அவரது கனவில் இறைவன் தோன்றி இப்பிறவி ஒழிய நீ நெருப்பில் மூழ்கி வேதியர்களுடன் நம்முன் அணைவாய் என்று கூறுகிறார். அதேபோல் மறுநாள் தில்லைவாழ் அந்தணர்கள் வளர்த்த தீயில் மூழ்கி எழுந்தவுடன் அவர் முனிவராய் பூணூலும் சடைமுடியும் கொண்டு வெளிப்பட்டார் என்கிறார் சேக்கிழார். இவ்விடத்தில் நந்தனாரின் தாழ்வுணர்ச்சியைப் போக்க இறைவன் நெருப்பில் மூழ்க சொன்னாரா? அல்லது அந்தணர்கள் ஏற்கவேண்டும் என்பதற்காகச் செய்தாரா? எனும் வினா எழுகின்றது. எவ்வாறாயினும் அந்தணர்கள், அடியவர்கள் போற்றத்தக்க புண்ணியமிக்க உடலைப் பெற்றார் என்ற சேக்கிழாரின் கருத்தில் பிறப்பினால் உயர்வுதாழ்வு இல்லை எனும் சமூகநீதி பொய்த்துப்போனதை உணர முடிகிறது.

வண்ணார் குலத்தில் தோன்றிய திருக்குறிப்புத் தொண்டர், சிவனடியார்களின் ஆடைகளைத் துவைத்துக் கொடுத்து வந்தவரை இறைவன் சோதிக்க எண்ணி வறிய அடியவராய் வந்தார். அவரது அழுக்கேறிய ஆடையைக் குறித்த காலத்தில் துவைத்துத் தருவதாக திருக்குறிப்புத் தொண்டர் ஒப்புக்கொண்டார். ஆயின் திடீரென, மழை பெய்ததால் துவைத்த ஆடையை உலர்த்திக் கொடுக்க இயலவில்லை. அடியவரைக் குளிரில் வாடவைத்துவிட்டோமே என்று வருந்திய அவர், தனது தலையைக் கற்பாறையில் வைத்து மோதிக்கொள்ள, இறைவன் அவரை தடுத்தாட்கொண்டார். இவ்வரலாற்றில் குலத்தொழிலைச் செய்தே ஆகவேண்டும் எனும் சூழ்நிலையில் திருக்குறிப்புத் தொண்டர் இருந்ததையும் பக்தி எனும் போர்வையில் உயர்சாதியினரின் ஆடைகளைத் துவைத்துக் கொடுக்கும் நிலைக்கு ஆளாகியிருந்த சமூக அவலத்தையும் நன்குணரலாம்.

பிள்ளைக்கறி சாப்பிட கேட்ட வயிரவர்க்கு (இறைவன்) மறுப்பேதும் கூறாமல் தன் ஒரே மகனைப் பெற்றவர்களே வெட்டி சமைத்து படைத்த வரலாற்றைப் பதிவுசெய்துள்ளார் சேக்கிழார். பக்திச்சோதனை என்ற பெயரில் தலைக்கறி முதல் கால் கறி வரை கேட்ட இறைவனின் செயல் ஏற்புடையதா? அதனை ஒப்புகொண்டு சமைத்துக்கொடுத்த சிறுத்தொண்டரின் செயலைப் பக்திப்பெருக்கு என்பதா? அல்லது மூடநம்பிக்கையின் உச்சம் என்பதா? எவ்வுயிரையும் கொல்வதற்கு நமக்கு உரிமையில்லை என்னும் சமூகநீதி இத்தகு வரலாற்றில் எங்குள்ளது? வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் எனும் இராமலிங்கரின்

வாக்கு இவ்விடத்தில் எண்ணத்தக்கது. வள்ளலார் சொல்லும் கடவுள், வருண, சாதி, சமய, மத, மொழி, நாடு, நிற வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டது. ''உண்மையில் கடவுள் எனப்படுவது அகிலமாம் – அன்பாம். அஃது உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலைநிறுத்துகின்றது.''4 சோதனை என்ற பெயரில் அடியார்களை வருத்தி பிறகு இறைவன் அருள் செய்வான் எனும் கருத்தாக்கம், சமூகநீதிக்குப் புறம்பானது.

கோட்புலியார் என்பவர், கோயிலில் இறைவனுக்கு உணவு படைப்பதற்காக நெற்கூடுகளில் நெல்லைச் சேமித்து வைப்பார். அவற்றை எக்காரணம் கொண்டும் எவரும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டார். அவர் போருக்குச் சென்றிருந்த சமயம், ஊரில் பஞ்சம் ஏற்பட்டு, பட்டினியால் மக்கள் உயிர் துறக்கும் நிலை ஏற்பட்டது. அதனால் அவரது உறவினர், சுற்றத்தார்கள் அந்த நெல்லை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டனர். போர் முடித்துத் திரும்பிய கோட்புலியார் செய்தியறிந்து, இறைவனுக்குரிய நெல்லை எடுத்த தன் தந்தை, தாய், மனைவி, உடன்பிறந்தார், சுற்றத்தார் என அனைவரையும் வெட்டி வீழ்த்தினார். ஒரு சிறு ஆண்குழந்தை மட்டும் ஏங்கி நிற்க,அதனையும் வெட்ட முற்பட, ''வாயில் காவலன், குடிக்கு ஒரே பிள்ளை. அருள் செய்யுங்கள் என வேண்ட, அதனை மறுத்து, இக்குழவி சிவசோற்றை உண்ணவில்லை. ஆனால் உண்டவளுடைய முலைப்பாலை உண்டது என்று கூறி அக்குழந்தையையும் வாளுக்கு இரையாக்கினார். அதற்குப் பின் சிவபெருமான் தோன்றி உன் கைவாளால் வெட்டுண்ட உன் சுற்றத்தவரெல்லாம் பாசம் நீங்கப் பெற்றார். மேற்பதவி எய்தினார். நீ இப்படியே நம்முடன் வருவாயாக''5 என்று அருள் செய்ததாக சேக்கிழார் கூறுகிறார். உயிர்கள் பசியால் வாடும் போது அவர்கட்கு உணவு அளித்தலை விட வேறு நற்செயல் இருக்க முடியுமோ? இத்தனை உயிர்களை வெட்டி வீழ்த்தும் செயல் மனிதாபிமானம் உடைய எவராலும் ஏற்கதக்கதன்று. ஒவ்வொரு சமயமும் அனைத்து உயிர்கள் மீது அன்பு கொள்வதையே வலியுறுத்துகிறது என்கின்றனர் சமயவாதிகள். ஆனால், கடவுள் பெயரால் நடக்கும் இத்தகு பலிகள் சமூகநீதிக்குரியனவா? என்பது சிந்திக்கத்தக்கது. பகுத்தறிவுள்ள மாந்தன் கொடிய செயல்களில் ஈடுபடக்கூடாது என்பது பெரியாரின் கருத்தாகும். ''பகுத்தறிவில்லாத எந்த உயிரினமும் தன் இனத்தை வருத்துவதில்லை. கீழ்மைப்படுத்துவதில்லை. தன் இனத்தின் உழைப்பால் வாழ்வதில்லை. தன் இனத்தின்மீது சவாரி செய்வதில்லை. ஆனால் பகுத்தறிவுள்ள மாந்தன் இத்தனையையும் செய்ய பின்வாங்க மாட்டான்.''6

நாயன்மார்களின் செயல்கள், பெரியாரின் கருத்தாக்கத்திற்கு முற்றிலும் புறம்பாக இருப்பதை அறியலாம்.

**சமயப்பூசல் – சமூகநீதியின்மை**

சக்தி நாயனார் என்பவர், சிவனடியாரை இகழ்பவர்களின் நாவினைத் தண்டாயத்தினால் வலிப்பர். கத்தியினால் அறுப்பார். இச்சக்தி வாயந்த செயலைச் செய்தமையால் அப்பெயர் பெற்றதோடு அதனையே பெருந்தொண்டாகச் செய்து வாழ்ந்து நாயன்மார் தகுதி பெற்றார். சமய நல்லிணக்கத்திற்கு எதிராக சமய துவேஷத்துடன் பலரைத் தண்டித்து கொலை செய்த சக்திநாயனாரின் வரலாறு முற்றிலும் சமூகநீதிக்கு எதிரானது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல்களில் பிற சமய எதிர்ப்புக் கருத்துக்களைக் காணமுடிகின்றது. வடதளியில் சமணர்களால் மறைக்கப்பட்டிருந்த சிவபெருமானை வெளிக்கொணர சத்தியாக்கிரகம் செய்த நாவுக்கரசருக்கு ஆதரவாக அரசன் ஆயிரம் சமணர்களை யானையினால் மிதிக்கச் செய்தான்.7 இவ்விடத்தில், ''சமயங்கள் மாந்தனின் பகுத்தறிவை மயக்கிக் கெடுக்கின்றது. மாந்தனை மாந்தனிடமிருந்தே பிரித்து வைக்கின்றன''8 எனும் பெரியாரின் கருத்து மெய்யென்பதைக் காணலாம். ''சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம் பக்தியை விட முதன்மையானது. இன்றியமையாதது''9 என்பதே பெரியாரின் கொள்கை உண்மையிலேயே யாரும ் அறிய முடியாத ஒரு கடவுளிருந்தால் அவரை அறிந்து அவருக்கே வழிபாடு செய்து வணங்கி வந்தவனைவிடக் கடவுளைப் பற்றிக் கவலைப்படாமல் கடவுளை வணங்காமல் அன்பு, அறிவு, உண்மை ஆகியவற்றுடன் நடந்துவந்தவனுக்கே தான் கடவுள் இரக்கம் காட்டுவார் எனும் பெரியாரின் கருத்தியலை உள்வாங்கி கொண்டால் பெரியபுராணத்தினை மீளாய்வுக் களமாக்கலாம்.

**முடிவுரை**

பெரியபுராணம் வரலாறாகவே இருப்பினும் அதில் கூறப்பட்டவற்றை உள்ளவாறே ஏற்றுக்கொள்வது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. இந்நூலில் சமூகநீதி சிலநாயன்மார்களின் வரலாற்றில் இறைவனருள் எனும் போர்வைக்குள் மறைந்துள்ளது. சமூகநீதியின்மை சிலவிடங்களில் சமயப்பூசலாக, சாதிவெறியாக, பக்தி, வேதம் படித்தவர் எனும் போர்வைக்குள் மறைந்துள்ளது. இக்கட்டுரையில் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட முடிந்ததே அன்றி முழுவதும் பார்க்கப்படவில்லை. ஆயின், நாயன்மார்கள் பாடிய பாடல்கள் முழுவதும் ஆராயப்பட்டால் பல சமூகநீதிகளையும் சமூக நீதிக்கு முரணானவற்றையும் அடையாளங்காண முடியும்.

**அடிக்குறிப்புகள்**

1. ப.86, ஈரோடு ஈன்ற பேரறிவாளன், ஈரோடு அறிவுக்கன்பன்,
2. ப.328,63 நாயன்மார், திரு.வி.க.,
3. ப. 40, அடித்தளப்படிப்பு, பகுதி-1 தமிழ்,
4. பக்.303, வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, மா.பொ.சி,

5. ப.312, 63 நாயன்மார், திரு.வி.க.,
6. ப.94, ஈரோடு ஈன்ற பேரறிவாளன், ஈரோடு அறிவுக்கன்பன்
7. ப.163, 63 நாயன்மார், திரு.வி.க.,
8. ப.81, ஈரோடு ஈன்ற பேரறிவாளன், ஈரோடு அறிவுக்கன்பன்
9. ப.119,புதுயுகத்தின் சிந்தனைச் சிற்பி தந்தை பெரியார், டி.வி. சுப்ரமணியன்

**துணைநூல்கள்**


1. ஈரோடு ஈன்ற பேரறிவாளன், ஈரோடு அறிவுக்கன்பன், தமிழ்க்குடி அரசுப்பதிப்பகம், சென்னை-05, முதல் பதிப்பு,2011
2. 63 நாயன்மார், திரு.வி.க., மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, முதல் பதிப்பு, 2001
3. அடித்தளப்படிப்பு, பகுதி-1 தமிழ், பதிப்புத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-05.
4. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, மா.பொ.சி, பெருமாய் புத்தகலாயம், சென்னை-33, மூன்றாம் பதிப்பு, 2012.
5. புதுயுகத்தின் சிந்தனைச் சிற்பி தந்தை பெரியார், டி.வி. சுப்ரமணியன், செந்தூரன் பதிப்பகம், சென்னை-33, முதல் பதிப்பு, 2009
6. பெரியபுராண ஆராய்ச்சி, டாக்டர். ம. இராசமாணிக்கனார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை-17, முதல் பதிப்பு, 2011

# தமிழாய்வுச் சங்கமம்

(தமிழ் இலக்கியத்திற்கான பன்னாட்டுக் கல்விசார் ஆய்வியல் அமைப்பு)

# TAMILAIVU SANGAMAM

---

இந்தியக் கல்விசார் ஆய்வாளர்கள் அமைப்பின் (IARA) சார்பில் பல்வேறு ஆய்வு மற்றும் முன்னேற்ற பணிகளைச் செய்து வருகிறோம். அந்த வகையில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி முதல் SELP Journal of Social Science என்ற தேசிய காலாண்டு ஆய்விதழையும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதல் Research Explorer என்ற பன்னாட்டு ஆய்விதழையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறோம். மேலும், IARA பதிப்பகம் மூலமாக 200க்கும் மேற்பட்ட தலைப்புகளில் ISBN எண்ணுடன் நூல்கள் வெளியிட்டு வருகிறோம். மேலும், தேசிய கருத்தரங்கம் நடத்த நிதி உதவியும் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ISBN எண்ணுடன் புத்தகமாகவும் வெளியிட்டு வருகிறோம். பேராசிரியர்களும் ,ஆய்வு மாணவர்களும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடுவதை ஊக்குவிக்கவும் தமிழியல் ஆய்வுக்கு எனத் தனியாக ஒரு தரமான ஆய்விதழ் தேவை என்ற கல்வியாளர்களின் கோரிக்கையினை ஏற்று 2014 ஜனவரி முதல் தமிழாய்வுச் சங்கமம் என்ற பன்னாட்டு ஆய்விதழ் ஒன்றைத் தொடங்கி, தொடர்ந்து நடத்தி வருகிறோம். பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களை ஒன்றிணைத்து தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்குத் தமிழாய்வுச் சங்கமம் விருது வழங்கி பெருமைப்படுத்தியும் ஆய்வு நிதி, கருத்தரங்கம் நடத்த நிதியுதவி போன்றவைகளை வழங்க தமிழாய்வுச் சங்கமம் எனும் கல்வி சார்ந்த அமைப்பு ஒன்றைத் தொடங்கியுள்ள இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர அழைப்பு விடுக்கின்றோம். இவ்வாய்ப்பினை ஏற்று உறுப்பினர்களாக இணையும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் உறுப்பினராக இருப்பவர்களின் ஆய்வுக் கட்டுரையை தமிழாய்வுச் சங்கமம் ஆய்விதழில் வெளியிடுவதற்குக் கட்டண சலுகையும், முன்னுரிமையும் அளிக்கப்படும்.

**வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் ரூ.500/**

**மதிப்புறு உறுப்பினர் கட்டணம் ரூ.2,000/**

உறுப்பினராகச் சேர விருப்பமுள்ளவர்கள் தமிழாய்வுச் சங்கமம் உறுப்பினர் படிவத்தைப் பூர்த்தி செய்து அதற்கான தொகையுடன் எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.